சென்னைப்பட்டணம் கஅசூரு௵ ஏப்பிரல்௴ எஉ. [இலக்கம். கஉ

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.
க. கடவுள்துதி........................	உருச
உ. விளம்பரம்........................	உருரு
ரு. தத்துவபோதினி..................	உருரு
ச. பெண்களுக்குக்கல்வி............	உருஎ
ரு. பிரசிநோபநிஷத்து...............	உச0
சு. பகவத்கீதை........................	உசக
எ. ஜன்மாந்தரம்......................	உசஉ
அ. பிரகிருதிசாஸ்திரம்......... ...	உசச
சு. அர்த்தசாஸ்திரம்................	உசரு
க0. சரித்திரம்........................	உசசு
கக. பகவதகீதோபந்நியாசம்......	உசஅ

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

கமாசுராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ரூ-பாஹிதகுண கணநிதியே-சகலவிதகொடிய
பா-பசமனநலமிகுமதியே.

அநுபல்லவி.

தாபமகலவெகு-சோபையுடையதயா
தீபசோதிதந்து-மாபலனளித்தருள்......................(ரூபா.)

சரணங்கள்.

க. நியதபருவங்களில்-மழைபனிமுதலியதழைத்து—பிரமா
நாடுமுழுமையிலும்-க்ஷேமம்நிலைக்க உன்னருளால்
வயல்கள்சோலைகளில்-மலர்களும் கனிகளும்
மாதந்தோறுமிக-வாகப்பலிக்கச்செய்க......................(ரூபா.)

உ. கடலில்திரியுகிற-தரணிகள்திநந்தொறும்—வெகுவாய்—பிரமா
விலையிற்சிறந்தபல-விதநவமணிகளைச்சொரிய
அபரிமிதவணிகம்-திநந்தோறும்பெருகவே
நாடுவாழ்வுற-மஹாபயனளித்தருள்......................(ரூபா.)

ரு. பரதகண்டந்தனி-லரசியல்நெறியுடன்—ஓங்க—பிரமா
பாமரவறிவுடனே-நிலையாமலேயொழிய
சகலகலைகளிலும்-விளங்குமுன்கருத்துகள்
நாழிதோறுமிக-வாகவளரச்செய்க......................(ரூபா.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய, கா. தெய்வசிகாமணி முதலியாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்து பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ள வர்கள் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.........................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள் தங்கள் சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ள வேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்து சந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா விதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிக்கையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்த விவரத்தை தயைசெய்து காரியகர்த்தருக்குத் தெரிவிக்கவேண்டியது.

தத்துவபோதினி.

சோதரர்களே! கடந்தபத்திரிகையில் ஆவசியகநிமித்தம் வேறுவிஷயத்தைக்குறித்துப் பிரஸ்தாபித்தபோதிலும் இனிபத்தாவதுநெம்பர் தத்துவபோதினியில்குறித்தவிஷயத்தைத்தொடர்ந்துவிசாரிப்போம். இதுவரை விசாரித்ததில்ஞானமேபரமசாத்தியமல்லவென்றும், அதுநமதுகோரிக்கைக்கு வியவஹிதசாதனமென்றும், அந்த ஞானத்தையடைய பிரத்தியக்ஷ அனுமான சப்தப்பிரமாணங்கள் உபாயங்களாமென்றும்,இவ்வுபாயங்களில் பிரத்தியக்ஷப்பிரமாணத்திற் சிறந்தது வேறொன்றுமில்லையென்றும், அது கிடையாதபக்ஷத்தில் அனுமானத்தால் பாதிக்கப்படாத சப்தப்பிரமாணமும் கிராஹியமாகுமென்றும், இவ்விரண்டும் கிடையாவிடினும், சப்தப்பிரமாணத்தைப்பரிசோதிக்கவும் மாத்திரமே அனுமானப்பிரமாணம்கிரகிக்கப்படவேண்டியதென்றும் ஏற்படுகிறதல்லவா? இனி இச்சாதனங்களைக்கொண்டு நாம் சாதிக்கவேண்டியவிஷயமின்னதென்பதைச் சற்றுவிசாரித்துவிட்டுப் பிறகு அதைச்சம்பாதிப்பதற்குரிய மார்க்கங்களைத்தேடுவோம்.

நமது பரமசாத்தியமாவதென்னவென விசாரிக்கப்புகுங்கால் தைத்தரீய உபநிஷத்து பிருகுவல்லியில் "ஆநந்தத்தின்பொருட்டே அனைவருமுயன்று அதை அடைகின்றனர்" ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத். என்று சொல்லியிருப்பது நினைவிற்கு வரும். இவ்வாநந்தம் அல்லது இன்பம், இம்மைச் சுகமென்றும், மறுமைச்சுகமென்றும், இருவகைப்படுமெனவும்; இம்மைச்சுகத்திலும் மறுமைச்சுகம்வேறானதென்றும்; சிலர்அபிப்பிராயபடுவோர்.ஆகிலும் இக்கொள்கைபழுதானதாகும். உண்மையாய்இம்மையில் சுகமடைந்தவன் மறுமையிலும்சுகமடைவான்; இம்மையில் துன்பமடைந்தவன்மறுமையிலும் துன்பமடைவானென்றும்; இவற்றுள்ஒன்றுகிடைத்தால் மற்றொன்று அவசியம்கிடைக்குமென்றும்; அவற்றிற்குரிய அனிவாரியமானபரஸ்பரசம்மந்தத்தை நீக்க ஒருவராலும்முடியாதென்றும்;

உறுதியாய் நம்பலாம். ஆனால் பணத்திற்கொழுத்த ஒருவன் அயலாருக்குத் துன்பமே புரிந்துகொண்டிருந்தும் அவன் மாத்திரம் தனதுசெல்வத்தின்சகாயத்தால் சுகமாயிருக்கிறானே, அவனுக்கு மறுமைச்சுகமும் கிடைக்குமோவெனச்சிலர் ஆக்ஷேபிக்கலாம். உண்மையாய் அவனுக்கு இம்மைச்சுக மிருக்குமெனில் மறுமைச்சுகமும் கிடைக்குமெனவே நம்பவேண்டியது. உண்மையான இம்மைச்சுகமென்பதற்குப் பொருளென்னவென்று கேட்கில் அதைச் சற்றுவிசாரிப்போம். சேதுஸ்நானம்செய்தால் பாபநிவர்த்தியும், மோக்ஷஸித்தியும், உண்டாகுமென நம்மவர் கொண்டிருக்கிறார்களல்லவா? ஒருக்கால் ஸ்நானம் செய்தவர்களுக்கே இத்தன்மையான பேறு கிடைக்குமாகில் ஜீவதசை முழுமையும் அதிலே முழுகியிருக்கும், மச்சியாதி ஜலஜந்துக்களுக்கும் மோக்ஷம் கிடைக்குமென்றால் அவர்கள் ஒப்புவார்களோ? தேவேந்திரபவனமென்று கவிகள் சிறப்பித்துக்கூறத்தக்க அரண்மனைகளில் வசித்துக்கொண்டு, மக்களுதவியாலும், செல்வபலத்தாலும் அடையக்கூடிய இன்பங்களெல்லாம் அனுபவித்து வருவதைக் காட்டிலும்பல மடங்கு அதிகஇன்பம் சாக்கடைச்சேற்றி லுழல்வதால் பன்றிக்குக் கிடக்குமாகிலும், அதை யின்பமெனப் பொருந்துமோ? ஆகையால் சுகதுக்கங்களின் சுவரூபத்தையும், அவற்றைச் சாதிப்பதற்குரிய உபாயங்களையும் அறிந்தபிறகு, நமக்கு இம்மையில் இன்பம் கிடைக்குமெனில், மறுமையிலும் தப்பாமல் சுகம்கிடைக்கும். சுவரூபக்கியானமுடையவர்கள் மறுமைப்பயனுக்குத் தடையாயுள்ள காரியங்களை ஒருக்காலும் இன்பமெனக் கொள்ளமாட்டார்கள். இதற்குநிதர்சனமாகநம்மவரில் ஒருகதைவழங்கிவருகிறதல்லவா? நமது தேசத்தில் அனாதியாய் நடந்தேறிவரும்வழக்கத்தையனுசரித்து, ஒருவித்துவான் பிறர்மகிழ்ச்சியின் நிமித்தம் சனியாசம் பெற்றுக்கொண்டு "கௌபீந ஸம்ரக்ஷணார்த்தாய அயம் படாடோப:" (கோவணத்தைக் காக்க இவ்வாடம்பரம்) என்பதுபோல் தமக்கு பிக்ஷையளிக்கும்பொருட்டு ஒரு பிராம்மணனையும் அவன் சம்சாரத்தையும்அழைத்துக்கொண்டு வேறுநாட்டிற்சென்று வெகுகாலம் வசித்தார். அவருடைய சிஷ்யனோவெனில் அவர் பஹிரங்கங்களையும் படாடோபங்களாம் பார்த்து மலைத்து, இந்தஅப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரகம் பகவதம்சமேயன்றி மானிடப்பிறப்பல்லவென்று நிச்சயித்துக் கொண்டு இரவும் பகலும் தன்தேகத்தையும்பிராணனையும் அவருக்கு அர்ப்பணைசெய்துவிட்டு இடையந்தரமின்றி உழைத்துவந்தார். இப்படியிருக்கையில், ஒருக்கால்அவருக்குக் காரியவசத்தால் வெளியிற் செல்லும்படி நேரிட்டபடியால் தன் மனைவியைபழைத்துத்தான்மீளும்வரையில்சுவாமிதிருவுள்ளத்துக்குத் தாழ்வின்றி சகல விதத்திலும் உபசாரம் செய்துவரும்படியாக்கியாபித்துவிட்டு, வெளியிற் சென்றார். பொறுமையில்பூமி யென்றும், கற்பில் அருந்ததியென்றும், அழகில் ரம்பையென்றும், சொல்லத்தக்க அந்தப்பெண்ணைக் கொண்டு சகலவுபசாரங்களையும் நடத்திக் கொண்டுவருகையில், பார்த்தால் பரிமளரங்கன் பாராவிட்டால் விரைக் கோட்டரங்கன் என்னும்படியான கபடசன்னியாசி கல்லையும் உருக்கும் அவள் உருவத்தையும், ஏகாந்தமான அச்சமயத்தையும் கண்டு, சன்னியாசத்தைமுடிந்து மூலையில் வைத்துவிட்டு, தன்னியற்கையானகுணங் களை வெளியிட்டு, காமவிகாரத்தால் அவளைப் பஞ்சிக்கெஞ்சி உபத்திரவிக்கத்தலைப்பட்டார். அச்சன்னியாசியிடத்தில் தன்கணவனுக்குள்ள மூடபக்தியைநன்றாயறிந்திருந்த அப்பெண்ணோவெனில், அவர்மனம்போல்நடவாவிடில் கணவன்கோபிப்பானெனப்பயந்து ஒருயுக்திசெய்தாள். அதென்னவெனில் அவள் சன்னியாசியை நோக்கி, அய்யா! உமதுகாலால் ஏவும்வேலையை நான் தலையால்பரித்துமுடிக்கச் சித்தமாயிருக்கையில், நீர்இவ்வளவு வருந்திக்கேட்பானேன். உமது இஷ்டம்போலஆகட்டுமெனச் சொல்லிவிட்டு, வீட்டுக்கதவுகளெல்லாம் திறந்துவிட்டு மீண்டு அய்யா! உமது இஷ்டத்தை நிறைவேற்றி

க்கொள்ளலாமென்றாள். பிறகு அந்தச்சன்னியாசி அவளைநோக்கிப்பெண்ணே! சமயத்தில் யாராவது உள்ளேவருவார்களெனில் என்பவிஷியம்போய்விடுமாகையால், தயைசெய்துதகவுகளை மூடுவாயாக என்றதைக்கேட்டு; அவள் சுவாமி! சர்வக்கியரும், சர்வவியாபகரும், சர்வாந்தர்யாமியுமாகிய ஒன்றானபரப்பிரும்மத்தைப் பக்கத்தில்வைத்துக்கொண்டு செய்யத்துணிந்ததேவரீர் அப்பிரயோஜகரும் தேவரடிமைகளுமாகியபிராகிருத ஜனங்களுக்குஅஞ்சுவது உங்கள் தகைக்கிசையுமாவெனக்கேட்டாளென்றும்; அதைக்கேட்ட ஆஷாடபூதிபுத்திபிரமித்து; வெட்கமடைந்து,அங்கமொடுங்கி,நெஞ்சம்கசிந்து மனிதர்கண் காணாமல் ஓடிவிட்டானென்றும்;சொல்லக்கேட்டிருக்கிறோமல்லவா? ஆகையால் மறுமையின் பத்துக்கு ஹானியானகாரியம் இம்மையில் தினையளவுஇன்பம் தருவதுபோல முதலில் தோன்றுமாகிலும், அதற்குமுன்னும் பின்னும் மனதில் ஜனிக்கும் திகிலையும், வெளியில் கிடைக்கும் பழிப்பையும், மனசாக்ஷி செய்யும் சிக்ஷையையும், மறுமையில் விளையும் தீமையையும் சற்றுமனதிலுறுவோமாகில் அந்தசுவல்பஇன்பத்தையும் அளவிலாத்துன்பமென மதிப்போமல்லவா? இதுபற்றிதான் "சிரேயசென்பதுவேறு, பிரேயசென்பதுவேறு" என்றுகடோபநிஷத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் சுகமளிப்பதுபோல் தோன்றி, பின்புஅளவிலாத் துன்பமளிப்பவற்றிற்குப் பிரேயசென்றும்; கேவலம் அனுபவத்தில் மாத்திரமேயன்றி பிறகுஎக்காலத்திலும் சாசுவதமான சிறப்பும், சுகமுமளிப்பதற்கு சிரேயசென்றும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் தெய்வத்துக்காவது மக்களுக்காவது அஞ்சவேண்டாது காரியங்களைச் செய்தால் இம்மையில் துக்கமின்றியே மறுமையிலும்சுகம்கிடைக்கும். இம்மைச் சுகத்துக்கும் மறுமைச் சுகத்துக்கும் அநிவாரியமானசம்மந்தத்தை விளக்கிக்காட்டவேண்டியது ஆவசியகமாகிலும், இன்றியபத்திரிகையில் அதைக்குறித்து விசாரித்து முடியாதாகையால் வருகிற பத்திரிகையில் அதைக்குறித்து பிரஸ்தாபிப்போம்.

பெண்களுக்குக்கல்வி.

(முன் சஞ்சிகையில் உகரு-வது பக்கம் ச-வது வரியில், ங-வது என்பதை க-வது என்று வாசிக்கவும்.)

நாடெங்கும் பிரகாசித்து அஞ்ஞான இருளை அகற்றும் ஞானசூரியனது கிரணங்களை மறைத்து இருளடையச்செய்யுங் காளமேகங்களைப்போலும், பெண்களின் மடமையென்பதை முன்சஞ்சிகையி லொருவாறு எடுத்துக்காட்டினோம். இன்று அக்கல்லாப் பெண்களால் நமது சன்மார்க்கநெறிகளுக்கு உண்டாகக்கூடிய இடையூறுகளை யோசிப்போம்.

கல்விப்பயிற்சி யடைந்த பெண்கள் காலவசத்தால் நிராதரவாக விடப்படுவார்களாகில் தங்களுடைய கல்வியின் உதவியால் அபகீர்த்திக்கும், பழிபாவத்துக்கும் இடங் கொடாத தொழிலினால் சீவனாம்சம் தேடிக்கொண்டு வாழ்ந்திருக்கலாம். எத்திறத்தோர்க்குங் கேடுவந்தவிடத்துக் கல்வியைவிட விசேஷித்த வேறு சகாயமில்லை என்பதை நாயனார் செப்பிய அடியில் வரும் குறளினா லறியலாம்.

"கேடில்விழுச்செல்வங் கல்வியொருவ
ற்கு மாடல்ல மற்றயவை."
"கற்றிலனாயினுங் கேட்கவஃதொருவர்
சொற்கத்தினூற்றாந்துணை."
"இழுக்கலுடையுழி யூற்றுக்கோலற்றே
யொழுக்கமுடையார்வாய்ச்சொல்."

இஃது ஆடவர்களைப்பற்றிச் சொன்னதேயன்றி பெண்களைப்பற்றி யல்லவென்றாலும், ஆண்மையிலும் வன்மையிலும், சிறந்த ஆடவர்க்கே கல்வியும் கற்றோர் கேள்வியும், இவ்வளவு ஆவசியகமா யிருக்க, பேதமையும், அச்சமும், தடுமாற்றமும் தங்களுக்கு விசேஷ சுபாவமாக உடைய பெண்களுக்கு

எவ்வளவு பயன்படத்தக்கவை யென்பதை ஊகித்துக்கொள்ளலாம். ஆயினும் இப்பயனை இங்கு சிறப்பித்துச் சொல்லக்கருதவில்லை. கல்வியாகிய பேருதவியில்லாமையினால் பெண்கள்தங்களுடைய மெல்லிய சுபாவத்துக்கும், அடக்கத்துக்கும், கௌரவத்துக்கும் அடாத இழிவான தொழில்களில் பிரவேசித்துத் தங்களுடைய சரீரப்பிரயாசையை விற்பதுமன்றித், தங்கள் சரீரத்தையே விற்கத்துணிந்து இகபர சுகங்களை இழந்து அபகிர்த்துக்குள்ளாவதுமன்றி, தமது அழகிய உருவத்தாலும், கயல்போன்ற கண்களாலும், ஆடவர்களை மயக்கி துன்மார்க்கத்தையே யூட்டி வளர்த்து மேன்மேலும் பெருகச்செய்வார்.

ஆனால் வித்தியாபிவிர்த்தியடைந்து நாகரீகத்தை யுற்றநாடுகளில் இத்துராசாரமில்லையோவெனில், உண்டு. ஆயினும், இன்னாடுகளில் பெரும்பாலோர் கல்வியின் உதவியால் மேன்மையான அநேகத்தொழில்களைச் செய்து மகத்தான துன்பமாகிய நோய்க்கு இடம் கொடுப்பதில்லை. இங்கிலாண்டு முதலிய நாகரீக தேசங்களில், பெண்கள் கல்விபயிற்சியடைந்து தந்திதபால், போஸ்டாபீசு, பாடசாலைமுதலிய இடங்களில், உத்தியோகம் பெறுவதுமல்லாமல் பலவிதவர்த்தகத்தாலும், விசித்திரமான பலவகைத் தொழிலினாலும், விசேஷ தனத்தையும் கனத்தையும் அடைகின்றனர். இன்னாட்டிலோவெனில், பெண்கள் வீட்டுவேலையன்றி, வேறுதொழிலில் பிரவேசிக்கிறதில்லை. மிகவும் எளியவராகிய சிலர் வறுமையினால் பிரவேசித்தபோதிலும், கூலிவேலை முதலிய தாழ்ந்தஜீவனமடைவதுமன்றி தங்களுடைய நாணத்தையும், நற்பெயரையும், இழந்துவிடுகின்றனர். கொஞ்சம் கையிருப்புள்ள ஒருஸ்திரீயானவள் கடைவைத்து ஏதாவதொரு வர்த்தகஞ்செய்யலாமென்று முயலுவாளாகில், யாவரும் இவள் பசாரி வெட்கங்கெட்டவளென்று கீழ்நோக்கி சம்ஸாரிகளிடத்து நடந்துகொள்வதுபோலன்றி, அடாதவார்த்தைசொல்லிப் படாதபாடு படுத்துவர். இதுநிற்க, வயற்றுக்கொடுமையோ பொல்லாதது.பசி, வெட்கமறியாது, பசித்தவன்வயிறு பழிபாவத்துக்கஞ்சுமோ! எவ்விதத்திலும் உதரபோஷணை செய்யவேண்டும், வேறுவிதியில்லை. இதுவன்றி பெண்கள் சுபாவமாய் விசேஷ ஆசையுள்ளவர்கள். கிஞ்சித்து அடைந்தால்போதுமென்று திருப்தியடையார்கள் என்பது லோகபிரசித்தம். “வயிறு கூழுக்கழுகின்றது, கொண்டைபூவுக்கழுகின்றது” என்கிறபழமொழி பெண்களின் நிமித்தமேயுண்டானதுபோலும். சோற்றுக்கில்லாவிட்டாலும், சோபிக்கவேண்டுமென்கிறகருத்து அவர்களிடம் சுபாவமாயமைந்திருக்கின்றது. ஆதலின் இவ்வித சுபாவத்தை யுடையோர் ஒருவிதசகாயமுமின்றி, குக்ஷிபாதை நிவர்த்திசெய்ய யாதொரு வழியுமில்லாமல், திக்கற்றுப்போவாராயின் இவர்கள் என்னதான் செய்யத்துணியார்கள். இவ்வாறு பெண்கள் கல்லாமையால் தாழ்ச்சியடைந்து தாங்களுங் கெட்டு தேசத்தையுங்கெடுத்து விடுவார்கள் என்பதற்கு இப்பொழுது இந்த பட்டணத்திலும், மற்றுமுள்ள ஸ்தலங்களிலும், மனிதரோடு ஏகமாகக்கூலிவேலைமுதலிய தாழ்ந்த தொழிலிலும் பிரவேசித்தும், யாதொரு தொழிலுமில்லாமல், தங்களைவிற்று ஜீவனஞ்செய்துவரும் பெண்களின் குணகுணங்களே சாக்ஷியாகும்.

எளியவர்தான் வயற்றுக்கொடுமையால் நெறிபிசகுவார்.செல்வருடையபெண்களோவெனில், இவர்கள் வயற்றுக் கொழுப்பினால் அதேகதியடையலாமென்று நினைக்கிறோம். கைபடாத இரும்பு துரும்பு பிடித்துப்போவதுபோல், வேலையில்லாமனது வெறி கொள்ளுமென்பார்கள். யாதொரு பயிருஞ்செய்யப்படாத பள்ளத்தாக்கும் பாழடைந்து பலமுட்செடிகளை யுண்டாக்கி பாம்பு தேள் முதலிய விஷஜெந்துக்களுக்கு பிறப்பிடமும் இருப்பிடமுமாக ஆகிறதுபோல் நமது மனது யாதொரு தொழிலுமில்லாமல் நிச்சிந்தையாய் சுகித்திருக்குமாயின் பழிபாவச்செயலையே நாடுமென்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். விசாரமில்லாதவன் வீண்வேலைசெய்வான். ஆதலால் செல்வருடையபெண்கள் சுகமாகத்தின்று கொழுத்து வேலையில்லாமல் வீண்கதை பேசி காலம்கழிப்பார்களாயின், அவர்களுடைய நேர்மை நீடித்திருப்பது துர்பலமே தான் சும்மாயிருந்தாலும் தன் கொழுப்பு சும்மாயிருக்கவொட்டாது.

இதுவன்றி மனோவின்பத்தை அறியாதவர்கள் புலன்களின் வழிபாட்டையும் சரீரவின்பமே பெரிதென்றுகருதி அதை மென்மேலும் பாராட்டி அச் சிற்றின்பங்களின் வசமாகி மெய்ம்மறந்து பழிபாவத்துக்கஞ்சாமல் பலதுஷ்கிருத்தியங்களைச் செய்யும்படி நேரிடும். கல்விப்பயிற்சி யடைந்தபெண் தனக்கு வேலையில்லாதகாலத்தில் பெரியோர்களால் செய்யப்பட்ட அழகிய கிரந்தங்களை வாசித்து ஆநந்தமடைந்து மேன்மேலும் தனது குணங்களையும், நடத்தையையும், சீர்திருத்திக்கொள்ளலாம். மனோவின்பம் அல்லது ஆத்மாநந்தத்தை அறியாதவர்கள் சிற்றின்பமாகிய சரீர அவஸ்தைகளை வெறுப்

பது அசாத்தியமாகாவிடினும் வெகு துர்லப
மேயன்றி சுலபசாத்தியமல்ல. மேலும்பெ
ரும்பாலும் கல்விப்பயிற்சியில்லாமல் மனோ
வின்பத்தை நாடுவதும் அசாத்தியம். ஆதலா
ல் கல்லாதபெண்கள் பெரும்பாலும் சிற்றி
ன்பத்திலேயே புரண்டு துச்சாரிகளாகி தா
ங்கள்கெடுவதுமன்றி தேசத்தையும் அழிப்
பார்கள்.

கல்வியானது விசேஷமாக பரவுகின்ற
அதிநாகரிக மடைந்த நாடுகளிலும், சகல
துஷ்கிருத்தியங்களும், இருஜாதியாராலுஞ்
செய்யப்படுகின்றனவே. கல்வியினால் என்
னபிரயோஜனமென்று சிலர் ஆக்ஷேபிக்க
லாம். இதற்குச்சமாதானமாக சில உபமா
னங்களை எடுத்துக்காட்டினால் போதுமெ
ன்று நினைக்கிறோம். ஒருமருந்தை வியாதி
யால் வருந்துகிற பத்துபெயருக்குக் கொ
டுத்தால் பலர் பிழைக்கிறார்கள் சிலர் இ
றந்து போகின்றனர். இதனால் மருந்தி
ல் பயனில்லை யென்று சொல்லி மருந்
தைக்கொடாமலிருக்கலாகுமோ? உலகத்தி
லிருக்கும் ஒவ்வொருவியாதிக்கும் அனேக
மருந்துகள் செய்யப்பட்டு வழங்கிவருகின்
றன. ஆயினும் அவ்வியாதிகளால் இறப்போ
ர்களை எண்ணிமுடியாது. இதனால் மருந்தி
ல் பயனில்லையென்றும் வைத்தியஸாஸ்திர
ம் பொய்யென்றுஞ்சொல்லலாமா? அழுக்
கும் துர்க்கந்தமும் நிறைந்த இடங்களில்
விசேஷமாக வாந்திபேதி யுண்டாகிற தெ
ன்று வைத்தியர் சொல்லுகின்றனர். ஆ
கினும், சுத்தமான இடங்களில் அது உ
ண்டாகிறதும், அசுத்தமான சில இடங்
களில் அது உண்டாகாமலிருப்பதையுங் க
ண்டு, வாந்திபேதி அசுத்தத்தினா லுண்டாகி
றதில்லை, நம்மைச் சுற்றிலுமிருக்கிற அ
சுத்தத்தை நாம் நீக்க வேண்டிய தில்லை,
வாந்திபேதி வந்தால் பார்க்கலாம் எ
ன்று சொல்லும் பயித்தியக்காரரும் உ
லகத்திலுண்டோ? ஆயினும் கல்வியால் பெ
ண்களுக்குப்பயனில்லை, அவர்களுடைய அ
றியாமையை நீக்கவேண்டிய அவசிய மி
ல்லைஎன்னும் புத்திமான்கள் அநேகரைக்க
ணக்கிடலாமல்லவா? இவர்கள்சற்றுயோசி
த்தால் தமதுஅபிப்பிராயம் பிசகென்று எளி
தில் அறிந்துகொள்ளலாமே! நமது பாவ
ங்களுக்குக் காரணம் இன்னதென்று முற்றி
லும் நிச்சந்தேகமாயறியா விட்டாலும், ந
மது அஞ்ஞானமே பெரும்பாலும் நமதுபா
வத்துக்கும் ஏதுவாயிருப்பதை ஒருவாறு
காண்கிறோமல்லவா? நமது அஞ்ஞானமா
கிய இருளை நீக்கி அதினால் விளையும் துக்க
த்தினின்றும், ஒருவாறு விலக முயலாமல்
நாம் முன்னும்பின்னும் செம்மையாக வறி
யோம். செத்தாலுஞ்சரியே பிழைத்தாலு
ஞ்சரியே இருந்தவிடத்தைவிட்டசையக்கூ
டாதென்று வீண் எண்ணமிட்டுக்கொண் டி
ருக்கலாமோ? நமது கருமமாகிய பிணிக்கு
ஒருமருந்துதேடாமல் வீணிலே மடியலா
மோ? நமது கருமப்பிணியை போக்குவதற்
குக்கல்வியும், கல்வியாலுண்டாகும் ஞானச
ஞ்சீவியையும், விட வேறுமருந்தை நாமறி
யோம். இம்மருந்து தவராத மருந்தென்று
சொல்லத்துணியமாட்டோம். ஆயினும் நம
க்குத்தெரிந்த இவ்வொருமருந்தையுமுண்ணு
ம விருப்பதொண்ணுமோ? மேலும் இம்மரு
ந்தை பூரணமாக சாதித்தாலன்றி அதன் மு
ழுபயனை அறியலாகுமோ? ஆதலால் நமது
யிருள்ளவரையிலும் இம்மருந்தை நாம்சாதி
க்கவேண்டாமோ? நம்மில் ஒருபகுதியாயும்,
நமது வாழ்க்கைத்துணை நலமாகவும், படை
க்கப்பட்டிருக்கும் பெண்களுடையகருமங்க
ளையும்அஞ்ஞானத்தையும் நமதுபோலவேபா
வித்து அவைகளை நீக்கமுயலவேண்டாமோ?
இந்த நற்றொழிலில் அவர்களுடைய சுகத்து
க்காக செய்யாவிட்டாலும் நமது காப்புக்
காயினும் அவசியஞ் செய்யவேண்டியதாயி
ருக்கின்றது. எனது அண்டைவீட்டுக்காரன்
வீடு பத்தி எரிகையில் அவனுக்குச் சகாயஞ்
செய்யாவிட்டாலும் என்வீட்டை காத்துக்
கொள்ளும்பொருட்டாவது அத்தியை அவி
க்க முயலவேண்டுமே!

பெண்களுடைய துச்சரிதைசஹவாசதோ
ஷத்தினால் ஆடவர்களையும் ஒருவாறுமயக்
க துன்மார்க்கத்தை மென்மேலும் பெரு
கச் செய்வதுமன்றி, அவர்களுடைய மட
மையும் பேராசையும் நேரோநமது புத்தி
யைமயக்கி அசத்தியத்துக்கும் அநியாயத்
துக்கும், உட்படுத்து மென்பதை இரண்
டொரு உதாரணங்களால் காட்டுவோம். ஒ
ருவன் சென்னைக்கல்விச்சங்கத்தில் வித்தியா
பியாசஞ்செய்து யோக்கியதாபத்திரம் பெ
ற்று நாலைந்து வருஷம் படிப்படியே உத்
தியோகத்திலுயர்ந்து இப்பொழுது தாசில்
வேலைசெய்வதாக பாவித்துக்கொள்வோம்;
அவன் தனது கல்வியை வீணிலே போகவி
டாமல்,

‘‘கற்கக்கசடறகற்றபின்
நிற்கவதர்க்குத்தக,”

என நாயனார் சொல்லியபடி யோக்கியா
யோக்கியதையும், சத்தியா சத்தியத்தையு
ம், அறிந்து யோக்கியதையோடும், சத்தியத்
தோடும், நடந்து இலஞ்சம்வாங்குதல் முத
லிய அநுசிதகாரியங்களைச் செய்யாமலிருக்
கமுயன்றுவருகின்றான்; உள்ளமட்டில் திரு
ப்தியடைந்து அவனிருந்தபோதிலும், அவன்

மணஞ்செய்துக்கொள்ளும் சீமாட்டிக்கோச
ற்றுந்திருப்தியில்லை. இதோபாரும் அண்டை
வீட்டு இரங்கன் நேத்திய மொட்டைப்பை
யன் உத்தியோகஞ்செய்து மெத்தைவீடுக
ள் தோட்டந்துரவுகள் கட்டியதுமன்றி,
மாதம்மாதம் ஆயிரம்ஆயிரமாய் குவித்துக்
கொண்டிருக்கிறான். நீர் என்ன சம்பாதி
த்தீர் குடியிருக்க நல்ல வீடுண்டா? கட்டு
வதற்கு நல்ல சேலையுண்டா? போடுவதற்கு
நல்ல உடைமையுண்டா! இத்தனைநாள்பெரி
ய உத்தியோகஞ்செய்தீரே; ஒருநூறுவராக
ன் உடைமைபோட்டதுண்டா! கையிக்கும்
வாயிக்கும் சரியாய்ப்போய்விடுகிறதே நா
னைக்குச்செத்தால் என்னை யார்காப்பாற்று
வார்! பிள்ளைகள் எப்படி அலையும், இவ்வ
ளவு பிரயாசைப்பட்டு வித்தைகற்றீரே "ச
"திவினவாடிகண்டே சாகலவாடுமேலு" எ
ன்பதுபோல் என்ன பிரயோசனம்; என்று
இவ்வாறு இச்சீமாட்டி பிரதிதினமும் அவ
ன் செவியிலும் முகத்திலும், இடியைப்போ
லிடித்துவருகிறாள்; அவனுக்கோமனவருத்த
முண்டாகி யோக்கியதையைவிடவும் மனதி
ல்லை; அவளை நீங்கியிருக்கவுங் கூடவில்லை;
அவள் வார்த்தைக்குப் பதில்சொல்லவுங்கூ
டவில்லை; இவ்வாறு இரண்டு தலைக்கொள்
ளிமி லகப்பட்ட எரும்புபோல் அலைந்துவர
அவள் உபதேசம் "நாளாவட்டத்தில் தலைக்
கேறுகின்றது. பெண்களுடைய துரபிமான
மும், பிடிமானமும் மகாகொடியதென்று
ம், பெண்வார்த்தைத்தடுப்பது அசாத்திய
மென்றும், எத்தேசத்தாரும் சம்மதிக்கின்
றனர். பெண்வார்த்லைதத் தடுக்கமாட்டாம
லல்லவோ, தசரதன் இராமனை வனவாச
ஞ்செய்யவிட்டு பிராணனைவிட்டது? அப்பெ
ண்வார்த்தைக்கிசைந்தல்லவோ இராமன் இ
ராவணயுத்தத்தில் படாதபாடுபட்டதும்? சீ
தையால் அபகீர்த்தியடைந்ததும்? இவ்வித
சரித்திரம் கிறிஸ்துவருக்குள்ளுமுண்டு. ஈ
வ் என்பவள் இச்சையைத்தடுக்கமாட்டாம
ல், ஆதம்ஞானத் தருவின் பழக்கத்தைப்புரி
த்து தன்னையுந்தன்சந்ததியனைத்தையும், பா
வத்துக்கும் மரணத்துக்கும் உட்படுத்தினா
ளென்று சொல்லுவார்கள். இம்மகான்க
ளெல்லாந் தோற்றுப்போன சண்டையில்
அவன் ஜெயிக்கவல்லவனோ? மேற்கூறியவிசி
த்திரம் கற்பனையென்று பலர்கருதினும், ந
ம்மைச்சுற்றிலுமுள்ளவர் பிடிப்பதினால் ந
மது நேர்மையினின்றும், சத்தியத்தினின்று
ம், இழிந்துபோகக்கூடுமென்பதை அனுபவ
த்தால் கண்டுகொள்ளலாம்.

இச்சரிதை சிலவிடத்து உண்மையாகநட
க்குமாயினும், இதொரு பெருங்குறையென்
று சொல்லலாமோ! ஆழ்கடலுக் கணுபோ
லென்று சிலர் நினைக்கலாம். ஆயினும் அ
ணுவே அண்டமாகுமாதலால் அணுவை இ
கழ்ந்து பராமுகமா யிருக்கலாகாது. ஆலை
யின்வித்து அணுவாயினும், மரம் பெரிதல்
லவோ! சற்று ஆழமாக யோசித்தால் அ
ணுவை தான் விசேஷ கவனத்தோடு காத்
துக்கொள்ளவேண்டும். ஏனெனில் பெரிய
வைகள் தாமாய் நமது கவனத்தில் படியும்,
சிறியவையோ நாம் எச்சரிக்கையாயிருந்
தாலொழிய பார்ப்பது அசாத்தியம். ஒருநி
மிஷத்தில் உயிரைக்கொண்டுபோகும் வாந்
திபேதிக்கு உடனே மருந்து தேடுவார்களா
யினும், பலவருஷம் அணுஅணுவாய் நமது
பலத்தைக்குறைக்கும் க்ஷயத்தை அதுமருந்
துக்கிசையாத துர்பலமடையும்வரையில் அ
நேகர்பாராட்டுவதில்லை. ஆதலால் நமதுகு
றைசிறியதென்று அலக்ஷயஞ்செய்யலாகா
து. பெண்களிடத்து நமக்கிருக்கும் நேசமு
ம்பாசமுஞ்சிறிதல்ல. அவர்கள்தங்கள் இஷ்
டப்படி ஆட்டவல்லவர். ஆதலால் அவர்களை
ச்சீர்திருத்தாததினாலுண்டாகும் கொடுமை
சிறிதல்ல. நமது சன்மார்க்கநெறி ஒருவிட
த்தில் பங்கப்பட்டால் முற்றும் அழிந்து
போம். துன்மார்க்கமானது ஓரிடத்திருந்தா
லும் வைக்கற்போரில்பட்ட தீயைப்போல்
நாடெங்கும்பரவும்.

பிரசினோபநிஷத்து. (தொடர்ச்சி.)

சு-வது பிரசினம்.

பின்பு இவரை சூரியபுத்திரராகிய கார்
கியர்கேட்டார்.

ஒபகவானே! இந்தபுருஷனிடத்தில் எ
துகள் தூங்கிறதுகள்? எதுகள் விழித்துக்
கொண்டிருக்கிறதுகள்? இந்த ஸ்வப்பனங்க
ளைப்பாற்கிற தேவன்யார்? எப்படிப்பட்ட
வர்? இந்தசுகம்யாருது? எதில்யெல்லாமட
ங்கியிருக்கிறது? என்றுகேட்டார். அவர் உத்
தரஞ்சொன்னார். ஓகார்கியனே! அஸ்தமி
க்கும்போது சூரியனுடைய கிரணங்களெல்
லாம் இந்த தேஜோமண்டலத்தில் எப்படி
ஒன்றாய் மறுபடி மறுபடி உதிக்கும்போது
அதுகள் பிரஸரிக்கிறதுகளோ, அப்படிதா
ன் அதெல்லாம் உயர்ந்ததேவனாகிய மனதில்
ஒன்றாகிறதுகள். அதினாலப்போது இந்தபுரு
ஷன்பார்க்கிறதில்லை,ஆக்கிராணிக்கிறதில்லை,
ருசி பார்க்கிறதில்லை, ஸ்பரிசத்தை அறிகிற
தில்லை, பேசுகிறதில்லை. கிரகிக்கிறதில்லை. ஆ
னந்திப்பதில்லை. விஸற்ஜிப்பதில்லை, சலிப்ப
தில்லை, தூங்குகிறதென்றுசொல்வார்கள்,இந்
தசரீரத்தில் பிராணாக்கினிகள்மட்டும் விழித்
துக்கொண்டிருக்கிறதுகள். இந்தஅபானமெ
ன்றதுகார்கபத்தியாக்கினி.வியானம்,அன்வா
ஹாரியபசனம். கார்ஹ பத்தியத்திலிருந்து

எடுத்துப்போடுவதினால் பிரணயனத்தால் ஆஹவனியமென்று சொல்லப்படுகிறஅக்கினி பிராணம்.உச்சுவாஸனிச்சுவாஸங்கள்,ஆகுதிகள், இதுகளைஸமமாய்நயிப்பிக்கிறது சமானம். மனஸுதான் யஜமானன். இஷ்ட, (இஷ்டம் (யாறம்) பலன்தான் உதானம். அது இந்த யஜமானனை பிரதிதினம் பிரும்மத்தை அடைவிக்கிறது. . இவ்விடத்தில் இந்ததேவன் ஸ்வப்பனத்தில்மஹிமையைஅனுபவிக்கிறான். பார்த்ததைபார்த்தபிரகாரம்மறுபடியும்பார்க்கிறான்.கேட்டதை அந்தஅர்த்தத்தையேமறுபடியும் கேட்கிறான். தேசாந்தரங்களிலேயும் திக்குதிக்குகளிலும் அனுபவித்ததை மறுபடிமறுபடி அனுபவிக்கிறான். பார்த்ததையும் பாராததையும் கேட்டதையும் கேளாததையும், அனுபவித்ததையும், அனுபவிக்காததையும்,ஸத்தையும்,அஸத்தையும்,ஸமஸ்தத்தையும் பார்க்கிறான். ஸர்வனாய்ப்பார்க்கிறான். அவன்தேஜஸ்ஸினால் அடிபடுங்காலத்தில் இந்ததேவன் ஸ்வப்பனங்களைப் பார்க்கிறதில்லை. அப்போதுதான் இந்தசரீரத்தில் ஸுகமுண்டாகிறது. ஓ ஸவுமியனே! பக்ஷிகளெல்லாம் தங்களுடைய நிவாஸவிருக்ஷத்தை யெவ்விதமாய் அடைகிறதுகளோ, அப்படிதானிதெல்லாம் உயர்ந்த ஆத்மாவினிடத்தில் ஸ்தாபிதமாகிறது. பிருதிவியும் பிருதிவிமாத்திரையும், அப்பும், அம்மாத்திரையும். தேஜஸ்ஸும் தேஜோமாத்திரையும் வாயுவும்,வாயுமாத்திரையும், ஆகாசமும், ஆகாசமாத்திரையும், சக்ஷுஸ்ஸும் பார்க்கவேண்டியதும்,சிரோத்திரமும் கேழ்க்கவேண்டியதும், கிராணமும் ஆகிராணிக்கவேண்டியதும், ரஸனையும் ரஸிக்கவேண்டியதும், துவக்கும் ஸ்பருசிக்கவேண்டியதும், வாக்கும் சொல்லவேண்டியதும், கைகளும் எடுத்துகொள்ளவேண்டியதும், உத்பாதகாவயவமும் ஆனந்திக்கவேண்டியதும், பாயுவும் விஸர்ஜிக்கவேண்டியதும், பாதங்களும் போகவேண்டியதும், மனஸ்ஸும் நினைக்கவேண்டியதும், புத்தியும் அறியவேண்டியதும், அஹங்காரமும் அஹங்கரிக்கவேண்டியதும், சித்தமும் சித்தத்தால் அறியவேண்டியதும்,தேஜஸ்ஸும் பிரகாசிக்கவேண்டியதும், பிராணமும் தரிக்கவேண்டியதும், (இதுகளெல்லாம் அந்தபரமாத்மாவில் சேருகிறதுகள்.)

ஏனென்றால் இவன்தான் பார்க்கிறவன்,ஸ்பருசிக்கிறவன், கேழ்க்கிறவன், ஆக்கிராணிக்கிறவன், ரஸத்தை அறிகிறவன், நினைக்கிறவன் அறியாதவன், கர்த்தாவானவன் விஞ்ஞானாத்மாபுருஷன். அந்தசாயையில்லாமலும்,சரீரமில்லாமலும், ரக்தமில்லாமலும்,(ரக்தவர்னமில்லாமலும்,) சுப்பிரமாயும், அவினாசியாயும் இருக்கிற அதை யெவனானால் அறிகிறானோ (அறிவிக்குறானோ) ஓ ஸவும்மியனே! அவன் ஸர்வத்தையும் அறிந்தவனாய் ஸர்வனாகிறான். அந்தவிஷயமான சுலோகம் எவடத்தில் விஞ்ஞானாத்மா ஸர்வதேவர்களுடன் பிராணங்களும் பூதங்களும்ஸதாபிதமாயிருக்கிறதுகளோ அந்த அவினாசிவஸ்துவை, ஓ ஸவும்மியனே! எவனறிகிறானோ (அறிவிக்கிறானோ) அவன் ஸர்வத்தையும் அறிந்தவன் ஸர்வத்தையும் பிரவேசித்தானென்று (சுலோகம்.)

பகவத்கீதை(தொடர்ச்சி).

௭-வது அத்தியாயம்.

௧. ஓபார்த்தா! என்னிடத்தில்ஆஸக்தசித்தனாக யோகத்தைஅவலம்பித்து,என்னையடுத்து என்னைஅய்யமற எப்படிநன்றாயறிவாயோ, அதைக்கேள்.

௨. விக்கியானத்துடன் பொருந்திய இந்த அறிவைமீதியின்றி உனக்குச் சொல்வேன். அதையறிந்து கொண்டபிறகு, இவ்விடத்தில் நீமறுபடியறிந்து கொள்ளத்தக்கது வேறொன்றுமில்லை.

௩. ஆயிரம்மனிதரில் சித்தியின்பொருட்டு யாரோஒருவன் முயலுகிறான். அப்படி முயலும் சித்தர்களிலும் என்னை உண்மையாய் அறிவோன் யாரோஒருவனே.

௪. பூமி, ஜலங்கள், அக்கினி, வாயு, ஆகாசம், மனம், புத்தி, அஹங்காரம் என்னும் என்னுடைய பின்னபிரகிருதியானது எட்டுவிதம்.

௫. புயத்திற்சிறந்தவனே! எதினால் இவ்வுலகம் தரிக்கப்பட்டு ஜீவபூதங்களாயிருக்கிறதோ அதுசிரேஷ்டமான என்பிரகிருதியின் வேறுபாடென்றறி.

௬. சகல பூதங்களும் இதையேவழியாக உடையனவென்று நிச்சயித்துக்கொள். உலகத்தின் சிருஷ்டியும், பிரளயமும் நானே.

௭. தனஞ்சயனே! என்னிலும் சிறந்தது வேறொன்றுமில்லை. நூல்ல் ரத்தனமணிகளைப்போல், என்னிடத்தில் இதெல்லாம் புணைக்கப்பட்டிருக்கின்றன.

௮. குந்திபுத்திரனே! நீரில் ரசமும், சந்திரசூரியாளில் ஒளியும், வேதங்களில் பிரணவமும், ஆகாசத்தில்ஓசையும், மனிதரில் மானிடத்தன்மையும்நானே.

௯. பிரதிவியில் நன்னாற்றமும், அக்கினியில் ஒளியும், சகலபூதங்களில் பிராணனும், தபசிகளில் தபசும்நானே.

௧௦. பார்த்தனே! சகலபூதங்களின் ஆதிமூலமென் றென்னை யறி. புத்திமான்களில் புத்தியாகவும், ஒளியுளோரில் ஒளியாகவும் நானிருக்கிறேன்.

௧௧. பலவான்களில் காமக்கிரோதங்களற்றபலமும், சகலபூதங்களிலும் தர்மத்துக்கு விரோதமில்லாதகாமமும்நானே பாதர்ஷபா!

௧௨. சாத்துவீக, ராஜஸ, தாமஸபாவங்கள் என்னிடத்தினின்றும் உண்டாகின்றனவென்று அறிந்துகொள். அவையென்வசமேயன்றி, நானவற்றின் வசமல்ல.

௧௩. இவ்வுலகமெல்லாம், முக்குணமாயமானஇந்தபாவங்களால் மோகித்துப்போகின்றனவேயன்றி, இவற்றால்சிரேஷ்டமானவும் அவியயமானவும் என்னைநன்றாய் அறிகிறதில்லை.

௧௪. தெய்வீகமானவும், இக்குணமயமானவும், என்மாயைகளைக் கடத்தலரிது. என்னையே (சரணமாய்)அடைவோர் என்மாயையைக்கடக்கிறார்கள்.

௧௫. துஷ்டரும், மனிதரிற்கடையோரும், இருள்சேரறிவினரும், அசுர ரியல்பினரும் ஆகியமுட்டாள்கள் என்னையடையுகிறதில்லை.

௧௬. ஓஅர்ஜுனா! ஓபாதர்ஷபா! நால்வகை ப்புண்ணியாத்மாக்களென்னை ப்பூஜிக்கிறார்கள். துன்பமடைந்தவரும், அறிவைவிரும்புவோரும், பொருளைக்கோருவோரும், அறிவுளோரும்.

௧௭. அவர்களில் நிலையான யோகத்தையும், ஓரிடத்தேபக்தியையும், உடையஞானியேசிறக்கிறான். ஞானிக்குநான் வெகுப்பிரியமானவன். எனக்கும் அவன் பிரியன்.

௧௮. இவ்வனைவரும் உதாரர்களே. ஞானியையோவெனில் நானாகவேமதிக்கிறேன். (ஏனெனில்)யோகத்தோடு பொருந்திய அவன் என்னையேசர்வசிரேஷ்டமான கதியாக நம்பியிருக்கிறான்.

௧௯. பலஜன்மங்க ளெடுத்தபிறகு சகலமும் வாசுதேவனே, அவன் துர்லபன்என்கிற ஞானமுடையவன் என்னையடையுகிறான்.

௨௦. அந்தந்தகர்மங்களுக்கு வசப்பட்ட மனமுடையவர்கள் இதரதேவதைகளையடைகிறார்கள். அந்தந்தநியமங்களைக் கைக்கொண்டு, தமதியல்பினால் ஆளப்படுகிறார்கள்.

௨௧. எங்கெங்கெந்தபக்தன்எங்கெந்தந்ததனுவை அர்சிக்க விரும்புகிறானோ அவனுக்கு அந்தநிலையானசிரத்தையை நானேகொடுக்கிறேன்.

௨௨. அந்தசிரத்தையோடு கூடியவன் அதின்பூஜையைச்செய்கிறான். பிறகு விஹிதமானவும் ஹிதமானம் விருப்பங்களை என்னாலே அடையுகிறான்.

௨௩. புத்திகுன்றிய அவர்கள் அடையத்தக்கபயன் முடிவுள்ளனவாம். தேவர்களைத்தொழுவோர் அவர்களை யடைவார்கள். என்பக்தர் என்னையடைகிறார்கள்.

௨௪. காணக்கூடாத என்னை புத்தியத்தவர் திருசியமென்று நினைக்கிறார்கள். என்னுடைய அழிவற்ற சர்வோத்தமும் சிரேஷ்டமுமான இயல்பையறிகிறதில்லை.

௨௫. யோகமாயையுடன்கூடிய என்னை எல்லோரும்காணார். இறப்பும் பிறப்புமற்றஎன்னைமுட்டாளாகிய இவ்வுலகத்தான் அறிகிறதில்லை.

௨௬. ஓ அர்ஜ்ஜுனா! நான்பூத, பவிஷியத், வர்தமானங்களையறிவேன். என்னை ஒருவனும் அறியான்.

௨௭. ஓபார்த்தா! பரந்தாபா! இச்சாத்துவேஷங்களால் விளையும் மோஹத்தால் சகலபூதங்களும் சிருஷ்டியில் பிரமமடைகின்றன.

௨௮. புண்ணியகர்மங்களையுடைய எந்த ஜனங்களின் பாபம் ஒழிகிறதோ, அவர்கள் த்வந்துவ மோஹங்களினின்றும் விடுபட்டு, த்ருடவிருதராக என்னை யடைகிறார்கள்.

௨௯. ஜராமரணங்கள் நீங்கும்பொருட்டு யார்என்னையடைந்து முயலுகிறார்களோ, அவர்கள் பிரும்மம்முழுமையும், அத்தியாத்மத்தையும், சகலகர்மங்களையும், அறிகிறார்கள்.

௩௦. ஆதிபூத, ஆதிதெய்வ, ஆதியக்கிய சஹிதனாகிய என்னை யார் அறிவாரோ, அவர்கள் பிரயாணகாலத்திலும் யுக்தமான மனதுடன் என்னையடைவார்கள்.

ஜன்மாந்தரம்.

௩-வது நியாயம்.

சதாநந்தஸ்வரூபமாகிய மோக்ஷநிலை யுண்டென்பது உண்மையானால் அந்நிலை பெரும்பான்மையோர் அடையும்பொருட்டு ஒரு ஜன்மகாலம் போதாமையாயிருத்தலால் பல ஜன்மங்கள் ஆவசியகம் என்பதாகத் தோற்றுகின்றது.

இந்நியாயத்தை விவரித்துக்காட்ட முதலில், மோக்ஷத்துக்கேதுவாகிய சாதனங்களின் சுபாவத்தாலும், இரண்டாவது அம்மோக்ஷத்தின் ஸ்வரூபத்தன்மையாலும், அது ஒருபிறப்புக்கு மகாதுர்லபமென்பதை கிரமெணவிசிதப்படுத்துவோம்.

மோக்ஷஹேதுவான சாதனங்களின் தன்மையைச் சாங்கோபாங்கமாக விசாரிக்கு

மளவில் அதை பலதேசத்தார்ப் பலவிதமாக மதித்தனர் என்றறியலாம். ஆயினும் இப்பலசாதனங்களும், கர்மம், ஞானம், பக்தி, ஆசாரியாபிமானம், பிரபத்தி என்கிற ஐந்தினுள் அடங்கும். இச்சாதனங்களில் ஒவ்வொன்றையும் தனியே விசாரித்துக் காட்டப்புகின், விஸ்தாரமாக நமது பத்திரிகையில் இடமில்லாமற் போகுமாதலால், சுருக்கமாக இரண்டொரு உதாரணங்களால் விளக்கி முடிப்போம்.

கர்ம்மத்தால் மோக்ஷ மடையலாமென்று கொள்ளினும், மோக்ஷஹேதுவான கர்ம்மங்கள் இன்னவையென்று நிச்சயிப்பது அசாத்தியம். அவ்வாறு நிச்சயித்தபோதிலும், அவை எல்லாதேசத்தாருக்கும், இப்பிறப்பில்தானே சாத்தியப்படாதென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும்.

ஞானமே மோக்ஷத்துக்குக் காரணமாகுமென்று சிலர் வாதிக்கின்றனர். ஞானம் தனியே மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதாயினும், ஞானமின்றி மோக்ஷமடையக்கூடாதென்பதை யெல்லாவிவேகிகளும் ஒத்துக்கொள்ளுவார்கள். மோக்ஷத்தையுண்டாக்குஞ்ஞானம் இப்படிப் பட்டதென்று இங்கு நிச்சயிக்கவேண்டிய தவசியமல்ல. அனேகலக்ஷம்பெயர் கேவலம் ஞானசூன்னியாளாகி மிருகங்களுக்கொப்பாகி, வனசஞ்சாரம் செய்வதையாவரும் அறிந்திருக்கின்றனர். இவர்கள்மோக்ஷமென்பதை கனவிலும்நினைப்பதில்லை. இவர்களுக்கும் கடவுளுடைய அளவற்ற கிருபையினால் இப்பிறப்பில் மோக்ஷமுண்டாகக்கூடுமென்றாலும், ஞானமின்றியும், தமதுமுயற்சியும் இல்லாமல் இவர்களெல்லாரும் ஜன்மாந்தரத்தில் மோக்ஷலோகமடைவார்களென்றால் அப்பொழுது மோக்ஷம் நிரஹேதுகரமாய் எல்லா மானிடருக்கும் ஜன்மாந்தரத்தில் லபிக்குமெனக்கொள்ளவேண்டும். அல்லது கடவுள் பாரபக்ஷியாகி சிலருக்கு மோக்ஷத்தையும், சிலருக்கு நரகத்தையும் அளிக்கின்றனர் எனக்கொள்ளவேண்டும். அல்லது இவ்விஷயம் நமது புத்திக்கு எட்டாது, இதைப்பற்றி நாம் விசாரிப்பது வீண் என்று கொள்வோமானால், ஜன்மாந்தரத்தில் என்னஉண்டாகுமோ நமக்குத் தெரியாதென்று சொல்லலாகுமேயொழிய, மோக்ஷமுண்டென்றாவது, வேறுபிறப்பில்லை யென்றாவது சொல்லக்கூடுமோ?

இவ்வாறே பக்தி விசுவாஸமும் ஒருபிறப்புக்கு லபிப்பது துர்லபம். விசுவாஸத்தின் தன்மை விளக்க ஒரு உதாரணஞ்சொல்லுவோம். இந்நாட்டில் குடியேறி இருக்கும் அநேக ஐரோப்பியரும், தமது பூர்வீகாளுடைய கொள்கையை விட்டொழித்த அனேக தேசிகளும் கிருஸ்துவை நம்பினாலொழிய மோக்ஷமில்லையென்று சாதிப்பார்கள். கிருஸ்துபிறந்து இப்பொழுது ௧௮௯௬-வருஷமாகின்றன. இதற்குமுன் மரணமடைந்த அனேகலெக்ஷம்பெயர் என்னகதியடைந்தார்களோ நமது சினேஹிதர் சொல்லத்துணியார்கள். கிருஸ்துபிறந்தும், இதுவரையிலும் அனேகர் கிரிஸ்துவின் நாமத்தையுங் கேளாமலே மரணமடைந்ததுமன்றி பின்னும் அனேகர் அவ்வாறே தேகவியோகமடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர்கள் எல்லாரும் நரகமல்லவோ அடையவேண்டும்? கிருஸ்துவை நம்புவதினால் மோக்ஷமுண்டாகும் என்பதின்சத்தியாசத்தையத்தை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. தமதுகுற்றமில்லாமலே, அவர் நாமத்தைக் கேளாதவர்களும் நரகமடையவேண்டுமென்பதை நம்புவதிலும், இவர்களுக்கு மறுபிறப்பில் மோக்ஷம்லபிக்கலாமென்பது, யுக்திக்குஏற்றதாயிருக்கின்றது.

ஆசாரிய ரபிமானமாவது வேதசாஸ்திரங்களை அறிந்தபெரியோரை அடுத்து அவர்களிடம் உபதேசம்பெற்று, அவர்களுடைய நற்போதனைக்கிசைந்து நடப்பதே, ஆக்கியாபிமானத்தால் சன்மார்க்கத்துக்கும், சிரத்தைக்கும், இடமுண்டானாலும், அதுவே மோக்ஷத்தையளிக்குமென்பதுபிசகு. ஆசாரியபுருஷன் துஷ்டனாயிருந்தால், மோக்ஷத்தை அடைவிப்பதை விட்டு நரகத்துக்கு ஏதுவாவான். ஆசாரியலக்ஷணத்தை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆசாரியனால் மோக்ஷமடைவதாயிருந்தாலும் ஒருபிறப்பில் சதாசாரபுருஷனாகிய ஆசாரியன் அகப்படுவது துர்லபம்.

பரமாத்ம ஜிவாத்ம தாரதம்மியமறிந்து இந்திரியநிக்கிரகஞ்செய்து அஹங்காரமமகாரங்களையொடுக்கி, தனது ஆன்மாவையெம்பிரான்வசமாக்கி அவனைவிடதனக்கு வேறுகதி இல்லை என்றுவிடாதுபற்றுவதே பிரபத்தியென்னலாம். இந்தவிசேஷக்கியானம் எல்லாருக்கும் இப்பிறப்பில் உண்டாகக்கூடுமென்று ஒருவருஞ் சொல்லத்துணியார்கள். இவ்விதசன்மார்க்கத்தில் முயற்சிசெய்துத் தவறிப்போவோர்க்கு விடாதநரகமுண்டென்று சொல்லுவது நியாயத்துக்கடுத்ததன்று. ஆதலால் இவர்கள் மறுஜன்மத்தில் சுகத்தைபெறலாமென்பது சுபாவம்.

இனிமோக்ஷத்தின் சுபாவத்தைப்பற்றி விசாரிப்போமாகில்அதுகர்மபந்தநிவாரணமே மோக்ஷமென்பதாகஅறியாலாம். இவ்விஷயத்தை முன்னமேவிசேஷமாகசொல்லியிருப்பதால்இங்குமறுபடியும்,பிரஸ்தாபிக்கவேண்

டியதில்லை. ஆதலால் நாம்இதுவரையில்சொல்லவந்ததின் சராம்சங்களை சங்கிரகமாகக்காட்டிமுடிப்போம்.

மனிதராகிய நமக்கு ஆத்மாவேறும் சரீரம்வேறு மாயிருக்கின்றது. ஆத்மஸ்வரூபமே நாம். சரீரம் நம்மைப்பற்றிய துன்பமாகி நமது துன்பங்களுக்கெல்லாம் ஏதுவாயிருக்கின்றது. எக்காரணத்தினால் பரிசுத்தமாகிய நமது ஆன்மாவுக்கு, இச்சரீராவஸ்தைசம்பவித்ததோ அதினாலேயே பலசரீராவஸ்தைகள் நேரிடலாமென்பது சகஜமாயிருக்கின்றது. நமது ஆசாபாசங்களை எல்லாம் பூர்ணமாக தியஜித்தாலன்றி நமக்குப்பேரின்பமுண்டாகமாட்டாதென்பதை அனுபவத்தாலறியலாம். இந்திரியநிக்கிரகஞ் செய்து அஹங்கார மமகாரங்களைவிட்டு எம்பிரானையேசரணடைந்து சஹிதஸத்குண சதப்பியாசம்பலஜன்ம சிருஷ்டியினாலுண்டாகவேண்டுமேயன்றி, எளிதிலுண்டாகத்தக்கதல்ல. ஆதலால் ஜன்மாந்தர முண்டென்பது சத்தியமென்று சாதிக்காவிடினும் அது அசத்திய மென்று சொல்ல யாங்கள் துணியமாட்டோம்.

பிரகிருதிசாஸ்திரம்.

முன்பதிப்பில் வஸ்துக்களைத்தண்ணீரில் விட்டு நிறுத்தால், அவைகளின் கனம்குறைகிறதென்பதை அனுபவத்தைக்கொண்டு தெரிவித்தோம். இனி அதுகுறைதற்குக்காரணம் இன்னதென்று தெரிவிக்கிறோம்.

நியாயநூலிற்சொல்லிய ஒன்பதுவகையான திரவியங்களில், மண், நீர், காற்று, இம்மூன்றும் குருத்துவாகர்ஷணத்திற்கு உட்பட்டன. அதனால் அவைகளுக்குத்தம்மைதாங்குந் திரவியத்தை உறுத்துகிறசக்தியுண்டு. அவ்வுறுத்தலின்அளவு, அவைகளின்கனத்திற்கேற்றதாகவிருக்கும். இவ்வுறுத்தலுக்கு எதிராக, இவைகளைத்தாங்குகிறதிரவியம் இவைகளையுறுத்தும். இவ்விரண்டுறுத்தலும் சமமாயிருந்தால், ஒன்றைமற்றொன்று அசைக்கமாட்டாது. ஒன்றினும்மற்றொன்று அதிகமாயிருந்தால், குறைவாகவுறுத்துகிறபதார்த்தம் அசையும்; அசைதற்கு அனுகூலமில்லாமற்போனால் உடைந்துபோம். ஒருமனிதன் ஒருபதார்த்தத்தைக்கையில்தாங்கினால் பதார்த்தத்தி னுறுத்தலுக்குச் சமமாக இவன் அதையுறுத்தினால், பதார்த்தம் அப்படியே நிற்கும். அதிலும் இவன் அதிகமாகவுறுத்தினால் பதார்த்தம் எழும்பும். இவனுடைய வுறுத்தலினும் அதனுறுத்தல் அதிகமாயிருந்தால், இவன்கையைத் தாழ்த்தவேண்டியிருக்கும். அப்படியல்லாமல்கையைமுன்போலவே பிடித்துக்கொண்டிருந்தால், கையொடிந்துபோம். இப்படியே மற்ற இடங்களிலும் கண்டுகொள்க. இங்கேகடினபதார்த்தத்தைக்குறித்துச்சொல்லியது திரவங்களுக்கும் உண்டு. சிலர்திரவங்களுக்குக் குருத்துவாகர்ஷணம் இல்லையென்று மயங்கலாம். அது தப்பான அபிப்பிராயம். கைநிறையத்தண்ணீரையெடுத்து ஆகாசத்தில்விட்டுவிட்டால், அது மற்றக்கடின பதார்த்தங்களைப்போலவே தரையைநோக்கி விழுவதைக்காண்கிறோம். அது குடமுதலியவற்றில் இருக்கிறதண்ணீரின்மேல்விழுந்தால், வேகவசத்தினால், கடினபதார்த்தம் எப்படிதண்ணீரைப்பிளந்துகொண்டு கீழ்நோக்கிச்செல்லுமோ, அப்படியே அதுவும் கீழ்நோக்கிச்செல்லுகிறது. அதனால் குருத்துவாகர்ஷணவிஷயத்தில் திரவங்களும் கடினபதார்த்தங்களும் வேறானவையல்ல.

ஒருதொட்டிநிறைய நீரைக்கொட்டினால் அந்நீர் தன்கனத்திற்கேற்பத்தொட்டியினடியையுறுத்தும். அந்நீரின் மேற்புறத்திற்குக்கீழும், தொட்டியினடிக்குமேலும், ஒரு அங்குலநீளமும் அவ்வளவே அகலமும், உயரமும் உள்ள நீரையெடுத்துக்கொள்ளுவோம். தொட்டிநீர்முழுதும், தொட்டியினடியை யுறுத்தலினால், இந்தநீரும் உறுத்தவேண்டியது. அப்படியுறுத்தியும், தொட்டியினடியாவது, நாம் எடுத்துக்கொண்டநீருக்கும்தொட்டிக்கும்நடுவிலிருக்கிற நீராவது, அல்லது உறுத்துகிற நீராவது அசையாமலிருப்பதால், இது எவ்வளவு உறுத்துகிறதோ, அவ்வளவேயிதுவும் உறுத்தப்படுகிறதென்று தெளிவாகிறது. இப்போது அந்நீரையெடுத்துவிட்டு அந்த இடத்துக்குச்சரியானதாய் மற்றொருபதார்த்தத்தைவைத்தால், அதுவும் முன்னிருந்த நீரைப்போலவே யுறுத்தப்படும். இவ்வுறுத்தல், மேற்காட்டியபடி, ஒருஅங்குல அகலம்நீளம் உயரம்உள்ள நீரினுறுத்தலுக்குச்சமமாயிருக்கும்.

ஒருபாத்திரத்தைக் கயிற்றில்கட்டித் தண்ணீருக்குள் தொங்கவிட்டால், அது இருக்கிற இடத்தில் அது செல்வதற்குமுன் இருந்த நீர்வெளிப்பட்டுப்போகவேண்டியது. வெளிப்பட்ட நீரின் அளவு, பாத்திரத்தினளவிற்குச் சரியாயிருக்கும். பாத்திரம் இரண்டுகன அங்குலங்களுள்ளதாயிருந்தால், வெளிப்பட்ட நீரும், இரண்டுகன அங்குலங்களுள்ளதாகவிருக்கும். இவ்வெளிப்பட்ட நீரின் கனத்திற்கு எவ்வளவு உறுத்தலோ, அவ்வளவு உறுத்தல் இப்பாத்திரத்தின்மேற் செலுத்தப்படும். ஆகையால், தண்ணீருக்குள் ஒரு கடினபதார்த்தத்தைவைத்தால், அது தனக்குச்சமமான அகல நீள கனங்களையுடைய நீரின்கனத்துக்கேற்ப மேல்நோ

க்கி யுருத்தப்படுகிறதென்பது தெளிவாகிறது. இதுதான் தண்ணீர் மொள்ளும்போது, பாத்திரம் நீருக்குள் இருக்கிறவரையில் அதன் பளு குறைந்திருப்பதற்குக் காரணம். அப்படியே, நீரில் விழுவதற்கு முன் பதார்த்தத்திற்கு இருக்கிற கனத்தை, அதன் அகல நீள கனங்களுக்குச்சமமான நீரின் கனத்தினால் பாகித்தால், வருகிற ஈவிற்கு விசிஷ்டகுருத்துவம் என்றுபெயர். இதுவிற்கப் பதார்த்தங்களுள், பொன், வெள்ளி, முதலியன கனமாயும், சடை, பஞ்சு, முதலியன கனமற்றவையாயுமிருக்க, இக்கனத்தின் தாரதம்மியத்துக்கேற்றபடி விசிஷ்டகுருத்துவத்தை யறிகிறவிதம் எப்படியென்றால், அதை விவரித்துச் சொல்லுகிறோம். ஒருவீசை கனமுள்ள இரும்பையும், அவ்வளவே கனமுள்ள பஞ்சையும் வைத்துப்பார்த்தால், இரண்டும் கனத்தி லொன்றாயிருந்தபோதிலும், ஆகாரத்தில்வேறுபட்டிருப்பன. இரும்பு உள்ளங்கைக்குள் அடங்கியிருக்கலாம்; பஞ்சுஒருகூடை நிறையவரும். இரும்பின்கனஅளவு, அரைகன அடியிருந்தால் பஞ்சின் கனஅளவு, இரண்டுமூன்றுகன அடிகளுக்கு மேற்பட்டிருக்கலாம். ஆகையினாலே இரும்பையும், பஞ்சையும், தண்ணீர்க்குள் செலுத்தினால், இரும்பினால் நீக்கப்பட்ட சலத்தைவிட பஞ்சினால் நீக்கப்பட்டது அனேகமடங்கு அதிகமாயிருக்கும். அதனால் இரும்பினால் நீக்கப்பட்ட சலத்தின் கனத்தைவிட பஞ்சினால் நீக்கப்பட்ட தன்கனம் அதிகமாயிருக்கும். இவ்விரண்டு கனங்களாலும், இரும்பு பஞ்சுகளின் இயல்பான கனமாகிய வொருவீசையைப் பாகித்தால், இரும்பைப்பற்றின விபாசகம் குறைந்ததாயும், பஞ்சைப்பற்றியது உயர்ந்ததாயுமிருப்பதால், இரும்பைப்பற்றின ஈவு உயர்ந்ததாயும், பஞ்சைப்பற்றினது தாழ்ந்ததாயும், இருக்கும். இதினால் இரும்பின் விசிஷ்டகுருத்துவம் அதிகமாயும், பஞ்சின் விசிஷ்டகுருத்துவம் குறைந்ததாயும், இருக்கும். இவ்வாறு கடின பதார்த்தங்களின விசிஷ்டகுருத்துவத்தை யறியலாம். இங்கே ஒரு வருத்த முண்டாகிறது. பதார்த்தங்களை நீரில் வைத்து நிறுப்பதில், பொன் வெள்ளி முதலியவை நீரினும் கனமான வஸ்துக்களானபடியினாலே அவைகளை நிறுப்பது வருத்தமன்று. சடை, தேக்கமரம்முதலியவை நீரினும், கனத்திற்குறைந்திருப்பனவாதலால் அவைகளையும், தேன், சாராயம், முதலியவைகளையும், அப்படிவைத்து நிறுப்பது கூடாமையாயிருப்பதால் இவைகளின் விஷயத்தில் என்னசெய்யவேண்டியதோ அதை இனிமேல் தெரிவிக்கிறோம்.

அர்த்தசாஸ்திரம்(தொடர்ச்சி.)

மாறும் மாறாதவென்று முன்விவரித்துக்காட்டிய இருவகைமுதல்களுள், மாறும்முதலே சிரேஷ்டமானதென்று சிலருக்குத்தோன்றும். ஏனெனில், களஞ்சியங்கள், ஆயுதவிசேஷங்கள், யந்திரவிசேஷங்கள், முதலியவைகள் அவைகளைப் படைத்தபேர்களுக்குப்பயன் படுவனவாயினும், வேலைசெய்வோர்களுக்கு ஜீவனக்குறைவை யுண்டாக்கும். ஒருவன் தன்னிடத்திலுள்ள மாறாத முதலை விருத்திசெய்வானாகில், மாறும் முதலுக்கு வைத்திருந்த பணம் குறைந்து முன்போல் அதிக வேலைக்காரரை வைத்துக்கொள்ள சக்தியற்றவனாவான். இவ்வாறு கூறுவது சரியோ சரியல்லாவோ வென்பதைச் சற்று விசாரிப்போம்.

வேலைசெய் வோர்க்கு நாம் செய்யத்தக்க உத்தமமான உதவி யாதெனில்உயர்வாய் வாழ்வதற்கு வேண்டிய பண்டங் களைநாட்டிற் பெருகச் செய்வதேயாம். அப்பண்டங்கள் விசேஷமாக உத்பத்தியாகும்போது அவையாரிடத்திலிருந்தாலும் வேலைக்காரர் விஷயத்தில் உபயோகிக்கப்பட்டா லன்றி, பயன்படமாட்டா. ஆகையால் மனிதர் பிழைத்து வாழ்வதற்குத் தேவையான பொருள்கள் அளவிறந்தவையாக விருக்குமேயாயின், அவற்றால் ஜீவாத்ம ஜனங்களும் அதிகமாயிருப்பார்களென்பது சந்தேகமில்லை. மேலும் உழைப்பைச்சுருக்கி மிகஎளிதாயும் அதிசுவல்பகாலத்திலும் செய்து முடிக்கத்தக்க வல்லமையை யளிக்கும் யாவும், ஒருதேசத்தில் விளையும்பண்டங்களை விருத்திசெய்யத்தக்கவை யல்லவா? இவ்வித பிரயோஜனத்தை மாறும் முதலைக்கொண்டு அடையத்தக்கதைவிட, மாறாத முதலால் அதிகமாக பெறக்கூடுமாயின், மாறாதமுதலே அவ்விருவகை முதலிலும் சிரேஷ்டமென்றும், அது செல்வர்களைவிட வேலைக்காரர்களுக்கே மிக்க பயன்படுவதென்றும், கூறுவதில் ஆக்ஷேபமுண்டோ? மனிதர்செய்யும்வேலையை, யந்திரங்கள்மூலமாக செய்துகொள்வோமாயின்,தொழிலாளிகளுக்கு பிழைப்பு கெட்டுப்போக வில்லையாவென்றாலோ, எவை வேலையைக்குறித்து அதை வெகுவிரைவில் செய்து முடிக்கின்றனவோ, அவையே கடையில் தேசத்துக்கு எல்லாநன்மைகளையும், பயிற்றி வேலைக்காரருக்கும் அதிகபிழைப்பை யுண்டாக்குமென்பதை முன் தெரிந்துகொள்ளவேண்டும். முதலில் யந்திரங்கள் புதிதாக உபயோகிக்கப்படும்போது சிலருக்கு கொஞ்சகாலம்வரையில் வருத்தம் நேரிடலாம். பின்பு தேசம் முழு

மைக்கும், எண்ணிறந்த பயன்களை யளிக்கும். இங்கிலாண்டுதேசத்தில் மேஜோடுகளை நெய்வதற்கு, ஒரு,புதியயந்திரம் கல்பிக்கப்பட்டபோது, முதலில் அத்தொழில்செய்து பிழைத்துக்கொண்டிருந்த தொழிலாளிகளுக்கு வெகுவருத்தத்தைவிளைவித்தது. சிலகாலத்துக்குப்பின் அவைகள் வெகு எளிதாயும், அபரிமிதமாயும் செய்யப்பட்டபடியால் மிக்க நயமாகி, முன் கனவிலும் அவைகளை வாங்குவதற்கு எண்ணாதபேர்கள் எல்லோரும் வாங்கி யனுபவிக்கத் தலைப்பட்டார்கள். இவ்வாறு மேஜோடுகள் யாவராலும் உபயோகிக்கப்படுவதைப் பார்த்து முன் அவைகளை செய்து விற்றுப் பிழைத்துக்கொண்டிருந்தவர்கள் அவைகட்குவேண்டியநூல் முதலியவைகளை நூற்கும் தொழில்களில் பிரவேசித்தனர். பின்புநூற்பதற்குகூட ஆர்க்குரயிட்டென்பவர் ஒருயந்திரம் உண்டுபண்ணினார். ஆகிலும் தொழிலாளிகளுக்கு பிழைப்பில்லாமற் போகவில்லை. யந்திரங்களினால் தெசத்துக்குண்டாகும் முக்கியமான பயன், தனவிர்த்தியாம். இத்தனம் விசேஷ பண்டங்களின் ரூபமாகவிருக்கும். செல்வரிடத்தில் அவை அபரிமிதமாகவிருந்தால் அவர்கள் என்னசெய்வார்கள் ! தாங்கள் ஆண்டனுபவிக்கத்தக்க அளவுக்கு மிஞ்சி யிருப்பனவைகளை வேலைக்காரருக்கு அளித்து அவர்களைக்கொண்டு மற்றசரக்குகளைச்செய்வித்து லாபம்சம்பாதிக்க தங்கள் முதலுடன், சேர்த்துவைப்பார்கள். அல்லது எந்தத்தொழிலினின்றும் அவர்கள்யந்திரங்களின் உபயோகத்தால் நீக்கப்பட்டார்களோ அதிலேயே பிரவேசிக்கும்படிசெய்யலாம். இவ்வாறு யந்திரங்களிருந்தும் வேலைக்காரரைமுன்போலவே விசேஷமாக உபயோகித்தல், அனாவசியகமாகத் தோன்றும். சற்று யோசித்துப்பார்க்குமிடத்தில், யந்திரங்களும், வேலைக்காரரும்சேர்ந்தால் முன் வேலைக்காற்களால் மாத்திரம் செய்யதக்க வேலைக்கு இருபதுபங்கு அதிகமான வேலை நடத்தப்படும். ஆகையால் முன்னிருந்த ஆடையாபரணங்கள் முதலியபொருள்கள் ஒன்று இருபதாய் பெருகும். இவைகள் யந்திரமூலமாய் கொஞ்சசெலவுடன் செய்யப்பட்டதனால் இவைகளின் கிரயம் குறைந்துபோகும். அப்போது அனேகர் அவைகளை வாங்குவார்கள். விற்பனை யதிகமாகும்போது அப்பொருள்களை மேலுமேலும்செய்வது அவசியமாகிறது. ஆகையால் முன் கையினால்உழைத்து இப்பண்டங்களைச்செய்துக்கொண்டிருந்தகாலத்தில் எவ்வளவுதொழிலாளிகளிருந்தனரோ அதைவிட அதிகவேலைக்காரர் முடிவில் தேவையாயிருக்கும்.

இதனால்தான் யந்திரங்களின் உபயோகத்தால் தொழிலாளிகளின் பிழைப்புக்குக் குறைவுநேரிடாதென்று முன் கூறியது. அவ்வாறுநேரிடாமல் ஏழைகள்முன் தங்களுக்கு எட்டாத பலவிதபொருள்களையும், இப்போது எளிதில் ஆண்டனுபவித்தற்குப் பாத்திரமாயிருக்கின்றனர். இவ்வித சிறந்தபயன்களையும் தேசமுழுமைக்கும் அளவற்றநன்மைகளையும் அளிப்பது யந்திரவிசேஷமேயல்லவா! செல்வம்மிகுந்த நாடுகளில் மிகவும் கஷ்டசாத்தியமானதொழில்களை நடத்துவதைப்பார்க்கிறோம். மலைகளைப்பிளந்து ரோட்டுகளும் வெகுதூரங்களிலிருந்தும் நதிகளை யொன்றாகச்சேர்க்க, பெருங்கால்வாய்களும் வெகுவிநோதமான வாராதிகளும், நேர்த்தியானகட்டிடங்களும், இன்னம்பற்பல அளவற்றதொழில்கள் ஏற்பட்டு பயிரிடுந் தொழில்,வர்த்தகம்முதலியவைகளில் வேலைக்காரருக்கு ஜீவனமுண்டாகியிருப்பதுபோலவே பலவாயிரம் ஏழைகளுக்கு பிழைப்பையீந்து காப்பாற்றுவதை பார்க்கிறோமல்லவா? இவைகளுக்கெல்லாம் காரணமென்ன? செல்வர்கள்தங்கள்பணத்தை யுபயோகிக்கும்பொருட்டேயல்லவா இவையெல்லாம் செய்கிறார்கள். பத்திரமும் ஸ்வேச்சையும் நிலைபெற்றுள்ள நாடுகளில் முதலைப்படைத்தவர்கள் அதை வீணாகவைத்து வைக்க மாட்டார்கள். சீரப்பிரயாசைக்கு முதலே எல்லையையேற்படுத்துகிறது. முதலுள்ளவொருவன் ஒருபுதிய யந்திரத்தைவாங்கி யுபயோகிப்பானாகில், அதனால் அவனுக்கு மாத்திரம் லாபம்கிடைப்பதன்றி, சாதாரணஜனங்களும்விசேஷமான நிலைபெற்றிருக்கத்தக்கபிரயோஜனங்களைப்பெறுகின்றனர். அவர்கள் சகலபதார்த்தங்களையும் நயமாக வாங்கி, அனுபவிப்பதுமன்றி மொத்தத்தில் ஒருநாள்முழுமைக்கும் பெறும் கூலியும், அதிகமாயிருக்கிறது. ஆகையால் இனிமேல் உண்டாகத்தக்க பெயர்களையதிசுலபத்தில் அடையும்படி செய்யும் கையிலுள்ள பொருள்கள் யாவும்முதல் என்றுகூறலாம். ஒருதேசத்திலுள்ளமுதல் அதின் ஜனங்கள[illegible] சொத்து சமுதாயத்தையும் சார்ந்ததென்றுபொருள்சொள்ளலாம்.

சரித்திரம்.

நியமங்களைக்கடந்து செய்யப்பட்ட இந்த யுத்தப்பிரயாணங்களினாலும், எதிர்பாராத நற்பயன்கள் விளைந்தன. ஜெருசலத்தை நோக்கிச் சொல்லுகையில், கிறிஸ்துவர் தங்களைக்காட்டிலும், நாகரீகத்திலும், பயிர்த்தொழிலிலும், சிறந்த நாடுகளைக்கடந்

தனர். அவர்கள் முதல் இட்டலியில் தங்கி
ஞர்கள். அதிலுள்ள வெனிஸுடீ, ஜினோவா,
பைஸா, முதலிய நகர்கள் வர்த்தகத்திலும்,
திரவியத்திலும், நாகரீகத்திலும் விசேஷ
விருத்தியடையத்தொடங்கின. அவர்களவ்
விடத்தில், கப்பலினின்று மிறங்கி, டால்
மேஷியாமூலமாய் கன்ஸ்டாண்டிநோபிலுக்
குக் கரைதுறையாய்ச் சென்றனர். கன்ஸ்
டாண்டிநோபில் ராஜியத்தில் வெகுகால
மாய்ச் சவுரியம்குன்றி, வெகுநீச கொடுங்
கோன்மையால் சமுதாய சுகுணங்களெல்
லாம் நசித்துவிட்டபோதிலும்; நாகரிகமற்
ற கிராதகக்கூட்டங்களின் நாசமுறுத்தும்
சண்டாள கோபத்துக்குப் பாத்திரமாகாம
லிருந்தமையால், அது ஒன்று மாத்திரம் யூ
ரோப்புக்குள் விஸ்தீர்னத்திலும் அழகிலும்
சிறந்ததாயும், பிராசீன ஆசாரகலாதிகளை
க்குறிக்கத்தக்க வியஞ்சகங்களையுடைய தா
யுமிருந்தது. இக்கிழக்கு ராஜிய மானது
நாவிகத்தில் வெகுபிராபல்லிய மடைந்திருந்
தது. அதில் வெகு விந்தையான வஸ்திரங்
கள் உளவாயின. கன்ஸ்டாண்டிநோபிலான
து இந்தியாதேசத்துச் சரக்குகளுக்கு ஒரு
பிரதானமான சந்தையாய்விளங்கிற்று. ஸா
ரஸன்களும், துருஷ்கருஷ்கரும், அந்த
ராஜ்யத்தைச்சேர்ந்த அநேக நாடுகளை அ
பகரித்துக் கொண்டமையால், அது விஸ்
தீர்னத்தில் குன்றியபோதிலும், மேற்கூறி
ய பலவழிகளால் அதில் பொருள் வந்து கு
விந்தமையால், அது விசேஷ சோபை
பொருந்தியிருந்ததுமன்றி, யூரோப்பின் மற்
ற பாகங்களைக்காட்டிலும், அதில் விசேஷ
கலாக்கியானுபிலாஷை யிருந்தது. எஷியா
வில்கூட காலிப்புகளுடைய சுவானுஷ்டா
னத்தாலும், புரோத்ஸாஹத்தாலும், பிரா
சுரிய மடைந்திருந்தனான, கலாசேஷங்க
ள், சிலுவைக்கொடியருக்கு விளங்கின. இ
ந்தக் குருஸேட்டைக்குறித்தெழுதிய சரித்
திரக்காரர்கள் அவர்களெதிர்த்துப்போர்செ
ய்த நாடுகளிலுள்ள ஜனங்களின் ஸ்திதி ஒ
ழுக்கம் முதலியவற்றைக்காட்டிலும், வேறா
ன விஷயங்களில் தங்கள் கவனத்தை நா
ட்டியபோதிலும்; இவற்றைத்தகுந்தபடி வ
ர்ணித்துக்கூற வுதவும், தெலுவிருசி முதலி
ய சாமக்கிரிகள் அவர்களில் பெரும்பான்
மையருக் கில்லாமலிருந்தபோதிலும்; ஸா
லடன் முதலிய சிலமஹம்தீய வரசர்களின்
காருண்ய அவுதாரியாதிகளைக்குறித்து வி
சேஷமாய்க் கூறுகின்றமையால், அவர்க
ளொழுக்கங்களை நாம்வெகுமேலானவையா
ய் கிரகிக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு
பலநாடுகளில் சஞ்சரித்து, பலவாசாரகோ
ட்பாடுகளைக் கண்ணுற்றும், இந்தக்குருஸே
டார், விசேஷக்கியானமும், விருத்தியும் அ
டையாமலிருத்தல் சாத்தியமோ? அவர்கள்
நோக்கங்கள் விரிந்தன. துரபிமானங்கள்க
ழிந்தன. புதிய அபிப்பிராயங்கள்ஜனித்தன.
தங்களிலும் அதிகமேன்பாடடைந்த ஜனங்க
ளின், ஒழுக்கங்களைக் கண்ணுற்றபோது, த
ங்களொழுக்கங்களின், மட்டித்தன்மையை
அறிந்திருக்கவேண்டும். இவ்வாறு அவர்கள்
மனதிற்பதிந்த விஷயங்கள் அவர்கள் சுவ
தேசமீண்டவுடனே அழிந்து விடத்தக்க அ
வ்வளவு லேசாயிருக்கவில்லை. இரண்டுநூற்
றுண்டு வரையில் மேனாட்டாருக்கும் கீழ்நா
ட்டாருக்கும் வெகுநெருங்கிய சம்மந்தமு
ண்டாயிருந்தது. ஒருதடவை போருக் குச்
சென்றவர் சுவதேசத்துக்கு மீண்டபோ
திலும், மறுபடி புதியசேனைகள் புறப்ப
ட்டு இடைவிடாது எஷியாவை நோக்கி
யூரோப்புமுழுமையும் சஞ்சரித் தமையால்,
அவர்கள் சுவதேசங்களுக்கு மீளுங்கால்
அன்னியநாடுகளில் அவர்களுக்குப் பழகிய
பலஆசாரங்களைக் கொண்டுவந்து வழங்கி
னர். ஆகையால் குருஸேட்டுகள் தொடங்கி
யஉடனே ராஜசபைகளில் அதிகசோபையும்
பொதுஉற்சவங்களில்அதிகடம்பமும்,இன்ப
விநோதங்களில் அதிகபரிஷ்காரமான விரு
ப்பமும், சாஹஸகிருத்தியங்களில் அதிவிசி
த்திர ஆவேசமும், யூரோப்பில் கிரமக்கிரம
மாய் ப்பரவியதாய்விளங்கும். முட்டாள்த
னத்தையும் மூடபக்தியையும் காரணமாயு
டைய இந்த வெறிகொண்ட படையெடுப்
பே நாகரீக மின்மையாகிய அக்கியான அந்
தகாரத்தைப் பறக்கவடிக்க உதவிய ஞான
ஜோதியின் உதயத்துக்குக் காரணமாயிற்று.

குருஸேட்டுகளினால், யூரோப்பில்பற்ப
லராச்சியங்களின் பூஸ்திதிகளுக்கும் அவற்
றால் ராசாங்கத்தின் பலத்துக்கும் உண்டா
ன நன்மைகள்மேற்சொன்ன நன்மைகளைப்
போலத் தாமதத்திற்றோன்றாமல் சீக்கிரத்தி
லேயே வெளிப்படையாயின. சிலுவையைக்
கையிலேந்தி எஷியாவுக்குச்செல்ல விரும்பி
யபிரபுக்கள், அப்படிதூரமாய்ச் செல்வதற்
கும், தங்கள் பணியாள்களுக்குத்தலைமையா
கத் தகுந்தகௌரவத்துடன் தோன்றுவதற்
கும் ஆவசியகமான அதிகசெலவின் பொரு
ட்டுத் திரவியத்தைச்சேகரிக்க பலத்தவரி
களைப் போடுவதே பியூடல்பத்ததியின் ச
ட்ட திட்டங்களுக்கும் அதன் குடிகளு
டைய வழக்கத்துக்கும் விரோதப்படிருந்
ததினால், தங்கள்ஸ்வாஸ்தியங்களை விக்கிர
யித்தலேஉத்தமமான வுபாயமென்று நிச்ச
யித்தனர். இப்படி எஷியாவில் புகழுடன்
வெற்றியையும் துருஷ்கர்கையினின்று ஜரு
ஸலத்தையும் பெறவேண்டுமென்கிற ஆவ

லானது இதா ஆசைகளுக்கிடங்கொடாமலவர்கள் மனதை முற்றும் கவர்ந்ததனால், அவர்கள் புராதனமான தங்கள் சொத்துக்களை யையமின்றி, அர்ப்பவிலைக்கு விக்கிரயித்து, முன்பின் கண்டுங்கேட்டுமிராத வாஸ்தவங்களை நோக்கிச் செல்லத்துணிந்தனர். யூரோப்பில் மேற்குத்தேசத்திய வரசர்கள்முதல் குருஸேட்டில் பிரவர்த்திக்காமலிருந்து மிகச்செலவன்றியே தங்கள் தேசங்களை விஸ்தீர்ணப்படுத்திக்கொள்ள விதுதான் நல்ல தருணமென்று நினைத்து, அதையதிக ஆவலுடன்அவலம்பித்தார்கள். இதுவுமன்றி, யுத்தத்திற்குப்போனவிடத்தில் வார்சுக்காரரற்றுமடிந்த பிரபுக்களுடையசொத்துக்களும், அரசனைச்சேர்ந்தமையால், பிரபுக்கள் பலம் நாள்தோறும் குறைய, அரசர்பல மேன்மேலு முயர்ந்தது. மேலும் அரசர்களையடக்கி விதியளிக்கத்தக்க திரனுடைய பாரிகுடிகள் ராச்சியத்தில் சுத்தமாயில்லாததினால், அரசனதிகாரம் பலமடங் கதிகப்பட்டது. அன்றியும், சிலுவையை யெடுத்தவருக்கு யாராகிலும் தொந்தரவுசெய்தால் அவர்களைச் சபித்துவிடுவதாகப் பாதிரிமக்கள் கங்கணங்கட்டிக் கொண்டிருந்தபடியால் ராச்சியத்தில் கலகாதாரமான உட்சண்டைகளும் பிரிவுகளுமின்றி, நிஷ்பக்ஷபாதமான நியாயம் சாதாரணமாய் அனைவருக்கும் கிடைத்து, யூரோப்பின் பலராச்சியங்களிலும், சீர்மையான அரசியல் ஏற்பட வழியுண்டாயிற்று.

குருஸேட்டுகளால் வர்த்தகத்துக்குண்டான க்ஷேமலாபாதிகள் கீழ்ச்சொன்ன நன்மைகளிற் குறைந்தனவல்ல. பீடர்என்னும் சன்னியாசியும், பூயிலான்தேசத்து காட்பிரேஎன்பவனும், ஜெர்மானியா, ஹங்கெரி தேசத்துவழியாக கன்ஸ்டாண்டிநோபில் பட்டணத்துக்கு முதல்முதல் நடத்திச்சென்ற சிலுவைத்து வசப்படைகள், யாத்திரையின் நீட்சியாலும், மார்க்கத்தில் நாகரிகமற்ற ஜனங்களுடைய கொடுமையாலும், மிகசங்கடப்பட்டதைக்கண்ட இதரசேனைகள் அம்மார்க்கத்திற்செல்ல வஞ்சிகடல்வழியாகச்செல்வது நீரபாயமென்றெண்ணி, அவ்வாறுபோக நிச்சயித்தார்கள். அப்போது யாத்திரைக்காக அவர்களுக்குக் கப்பலையுதவி பிரதியாகக்கூலியில் வெனிஸ், ஜிநோவா, பைசா, ராச்சியங்கள் அபரிமிதமான செல்வத்தை யடைந்தன. இச்செல்வமும், ஜருஸலயுத்த பிராரம்பமுதல் அந்தியம்வரையில், படைகளுக்கு உணவுமுதலிய சாமான்களைக்கப்பல்களிற்சேர்த்துவைத்து அக்கப்பல்களைக் கரையருகில் நிறுத்தியிருந்து, கேட்டவிடத்தில் வேண்டுமவற்றைத்தர ஒப்புக்கொண்ட குத்தகையினால் குவிந்த பணத்துடனொப்பிட்டுப்பார்க்கையில், அணுபரமாணுவைப்போலத் தோன்றும். ஜருஸலயுத்தத்தில் கிறிஸ்துவரடைந்த வெற்றியினால், இன்னும் சில சாசுவதமான நலமுண்டாயின. வெனிஸ், ஜிநோவா, பைசா, அரசுகளுக்குக் கிறிஸ்துவர்களால், அக்காலத்தில் கொடுத்திருக்கப்பட்ட ஸ்வதந்திரங்களைக் கண்டிருக்கும், சாஸனங்களில் நாளையவரையிலும், சில விருக்கின்றன. அவற்றால், மேற்கண்ட மூன்று ராஜியத்தார்களால் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் யாதொருபொருளுக்கும் தீர்வையில்லாமையும், சமுத்திரதில்நகர்சிலவற்றிற்குச்சுற்றுப்பட்டிலுள்ள கிராமங்களும், மற்றவற்றிலுள்ள அனேகவீதிகளும், அவர்கள்ஸ்வாதீனமாக்கப்பட்டு அவற்றில் குடித்தனம், அல்லது வர்த்தகம் செய்பவர்களுக்குண்டாகும் சண்டைசச்சரவுகளைசொந்தவிதிகளைக்கொண்டு சொந்த நியாயாதிபதிகளால் தீர்ப்புசெய்ய அதிகாரமும், ஆகிய ஸ்வாதந்திரியங்கள் அவர்களுச்குண்டாயின. குருஸேடர்கான்ஸ்டாண்டிநோபிலைப் பிடித்துகொண்டு தங்கள் தலைவனொருவனைச் சிங்காதனத்தில்வைத்தபோதும், இடாலயாராஜியம்லாபமடைந்தது. வெனிஷியர்கள்இந்த யுத்தத்தை ஆரம்பிக்கச்செய்து, பின்னர் அதைக்கைவிடாது நடத்துவதில் ஊக்கமுற்றிருந்ததுபோலவே அதில் ஜயமடைந்தபிறகு அதினால் லாபமடைவதிலும் கண்ணோக்கமாயிருந்தனர். அவ்வாறே அவர்கள் கிரீஸில் பிலப்பனிஸஸின் பெரும்பாலும், ஆர்கிபேல்கோவில் செழிப்பான பலதீவுகளையும் வசப்படுத்திக்கொண்டார்கள். கான்ஸ்டாண்டிநோபிலில் முன்னடந்து வந்த வர்த்தகம் பெரும்பான்மை இம்மூன்று ராச்சியங்களுக்குத் திரும்பியது. இவ்வித ஹேதுக்களால் ஜருஸலயுத்தமானது இம்மூன்று ராச்சியங்களுக்குள் செல்வம் அபாரமாக சொரிய பலமடைதனைத் திறக்கவந்தது போலும், அச்செல்வத்தைக்கொண்டும், இனி சொல்லப்போகிற ஒரு ஏற்பாடைக்கொண்டும், அம்மூன்று ராச்சியங்கள் ஸ்வாதந்திரிய கௌரவங்களை யடைந்தார்.

பகவத்கீதை - உபந்நியாஸம்.

“முன்நடந்த பிரஸங்கத்தில், மனிதன் பொருளீட்டி அறங்களெல்லாவற்றையும் செய்தற்கு முதற்கருவியாகிய தேகத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றும்; எல்லாப்பயன்களையும் பெறுவதற்கு உபாயமான அறிவைச்சம்பாதிக்கக், கல்வி கற்கவேண்டுமெ

ன்றும்; இம்மை மறுமைகளுள், இம்மையிலடையுஞ்சுகம்நிலையற்றதென்றும், மறுமையிலடையும் இன்பங்களிலும் இந்திரபதவி முதலியவற்றில்அடைவனநிலையற்றனவென்றும்; முத்தியேநித்தியமாயிருப்பதென்றும் பிறப்புகளெல்லாவற்றுள்ளும் மனிதப்பிறப்புசிறந்ததென்றும்;ஆத்துமாதேகத்திற்குவேறானதென்றும்; கடவுள், நாம்செய்தவினைகளுக்கேற்றபடி, நமக்குத்தேகங்களையும், இன்பதுன்பங்களையும் தருகிறாரென்றும்; பிறவிக்கேதுவாகிய இருவினைகளையும் மனிதப்பிறப்பிலேயே ஒழித்துவிடவேண்டுமென்றும்; அவ்விருவினைகளுக்கும் ஏதுவாயிருப்பது அகங்கார மமகாரரூபமான அவிச்சையென்றும்; நாம் ஒருதலையாய் அடைதற்குரியது வீடென்றும்; கடவுளின் உடைமையான ஆத்துமாவை யவருக்கேயுரியதாக அளித்துவிடவேண்டியதென்றும்; முத்திபெறுவதற்குச் சிறந்த கருவியாயிருப்பது பகவத்பக்தியென்றும்; அந்தபக்திஆசிரிய வழிபாடு முதலிய நற்செய்கைகளாலுண்டாகுமென்றும்; அந்தப்பக்திக்குத்தடையாயுள்ளன காமக்குரோத முதலியன வென்றும்; ஆத்மாவுக்குக் கேடுசெய்பவையான அந்தக் காமாதிகளைவெல்லவேண்டுமென்றும்; இந்தப்பொருள்களையெல்லாஞ் சொல்வதுமதநூலென்றும்; அம்மதம்நம்பிக்கொள்கையின் மீதுநிலையுறுவதென்றும்; மதத்தில் முக்கியமான பிரமாணங்கள் மூன்றென்றும்; அவற்றுள் கடவுளினுண்மையை யறிவதற்குச் சப்தப் பிரமாணமான வேதமே சிறந்ததென்றும்; மதம் ஆஸ்திகமெனவும், நாஸ்திகமெனவும், ஆஸ்திக நாஸ்திகமெனவும், மூவகைப் படுமென்றும்; அவ்வேதத்தை மேற்கோளாகக்கொண்டு நம்மவர்கள் மதத்தை நால்வகையாகக் கொண்டிருக்கிறார்களென்றும்; சொல்லப்பட்டது. அந்தந்த சமயங்களின் வரலாறு தெரியாமல் இனிச்சொல்லப்படும் விஷயங்கள் விளங்காவாகையால் முன்னதாய் அச்சமயங்களின் முறையைச் சுருக்கிச்சொல்லுதல், அவசியமாயிருக்கிறது. அவற்றுள்முதலில்அத்துவிதசமயத்தின் முறையைச்சொல்லுகிறோம்."

அத்துவிதசமயம்.

"அத்துவித மென்பது பேதமில்லாமை. பேதமில்லாமையைச் சொல்லுகிறபடியினாலே இதற்கு அத்துவிதமென்கிற பெயர்வந்தது. எதற்கும் எதற்கும் பேதமில்லையென்று சொல்லுகிறதோ, அது இனிமேல் தெளிவாய்த்தெரியும். இச்சமயத்தார் பிரம்மம் என்றும், அவித்தையென்றும் இரண்டினைக்கொள்கிறார்கள். அவற்றுள் பிரம்மம் ஸத்தாயும், சிதாநந்தவடிவாயும், அவிகாரமாயும், நிரவயவமாயும், நித்தியமாயும், தோஷரகிதமாயும், பூரணமாயும்இருப்பது.

சத்தென்பது முக்காலத்திலும் உள்ளது. சித்ஆநந்தம், என்பனமுறையே, ஞான இன்பங்கள். சித்என்பது உ-வது அறிவதாம். ஆநந்தமென்பது பரமப்பிரீதியில்விஷயமாவதாம். அவிகாரமென்பதுவேறுபடுதலின்மை. நித்தியமென்பது சதோதிதமாயுள்ளது. பூரணமாவது சர்வசம்பந்தமாயிருக்கை. அவித்தை பாரமார்த்திகமல்லாதது. சத்தினும் அசத்தினும் வேறாயிருப்பது. ஜடமாயிருப்பது. விகாரமுள்ளது. உறுப்புள்ளது. முதலில்லாதது. முடிவுள்ளது. அஞ்ஞானவடிவாயிருப்பது.

பாரமார்த்திகமல்லாததென்பது, பொய்யென்பது. தத்துவஞானத்தினால் நீங்குவது. இது வியாவஹாரிகசத்து, என்று சொல்லப்படுகிறது. சத்தினும் அசத்தினும் வேறென்பதற்கு சத்தாகிய பிரம்மத்தினும், அசத்தாய்த் துச்சமான முயற்கோடு முதலியவற்றினும் வேறாய் உள்ளதென்பது பொருள். பிரம்மத்தைப்போல பாரமார்த்திச மானதன்று. துச்சத்தைப்போலப் பிரமாணத்துக்கு அகப்படாததுமன்று. இது சத்வம், ரஜஸ், தமஸ், என்னும்இம்முக்குணவடிவாயிருக்கின்றது. இக்குணங்களின்தன்மையும், பயனும் இனிக்கூறப்படுவதால் தெளிவாகவிளங்கும்.

இந்த அவிச்சைக்கு ஆவரணசக்தியென்றும், விக்ஷேப சக்தியென்றும், இரண்டு சக்திகளிருக்கின்றன. ஆவரணசக்தியுள்ள அவித்தையினால் மூடப்பட்டபிரம்மத்திற்கு, இருட்டிலிருக்கிற மனிதனுக்குப்போலத், தன் உண்மை தெரியாமல் விட்சேபரூபமான தேவர், மனிதர் என்னும்பேதமாகிய தோற்றம் உண்டாகிறது. ஆபரணமென்பது மறைப்பு. விட்சேபம்என்பது தோற்றம். தேவர் முதலிய பேதமானதோற்றங்கள் அவிச்சையின் பரிணாமங்களேயன்றி யுண்மையானவையல்ல.

இந்த ஞானவடிவானபிரம்மம், சுத்த சைதன்னியம் என்றும், மாயாவச்சின்ன சைதன்னியம் என்றும், அந்தகர்ணவச்சின்னசைதன்னியம்என்றும், விருத்தியவச்சின்ன சைதன்னியம் என்றும், விஷயாவச்சின்ன சைதன்னிய மென்றும், ஐந்துபேதங்களுள்ளது. பிரம்மம் சுத்தமாயிருக்க அதற்குப் பேதங்கள் எப்படியுண்டாகின்றனவென்றால், அவித்தை முதலாகிய உபாதிபேதங்களால் உண்டாகின்றது. ஆகாசம் ஒன்றாயிருக்க, கடாகாசமென்றும், மடாகாசமென்றும், கூறப்படும்பேதம்ஆகாசமென்னும்பொருளிலேயே யியற்கையாய்மைந்திருப்பதன்று.

அவச்சின்னமென்பது ஒரு சம்பந்தவிசேஷம். அதில்சுத்த சைதன்னியம் இத்தன்மையதென்று முன்பே கூறப்பட்டது. மாயாவச்சின்ன சைதன்னியம் என்பது ஈச்சுரன். இந்தமாயாவச்சின்ன சைதன்னியமாகிய ஈச்சுரனே லோக ஸிருஷ்டியாதி களுக்குக் கருத்தாவாயிருப்பவன். எல்லாவற்றுள்ளும் அதிபவன். இவனே சகுணப்பிரம்மம் என்று சொல்லப்படுகிறான். சகத்கர்த்திருத்துவ முதலியவை உபாதியால்வருவன. இந்த ஈச்சுரனுக்குச் சித்திரபடத்தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

యథాచిత్రపటేదృష్ట మవస్థానాంచతుష్టయం;

పరమాత్మనివిజ్ఞేయం తథావస్థాచతుష్టయం;

యథాధౌతోఘట్టితశ్చలాంఛితోరంజితఃపటః;

చిదంతర్యామిసూత్రాత్మావిరాడ్వాత్మాతథోచ్యతే,

స్వతశ్శుభ్రోత్రధౌతస్స్యాత్ ఘట్టితోన్నవిలేపనా [త్

మష్యాకారైర్లాంఛితస్స్యాత్ రంజితోవర్ణపూ [రణాత్

స్వతశ్చిదంతర్యామీతుమాయావీసూక్ష్మ [సృష్టితః

సూత్రాత్మాస్థూలసృష్ట్యైషవిరాడిత్యుచ్య [తేపరః.

அஃதெவ்வாறெனின், சித்திரமெழுதுமுன், வெள்ளைப்புடைவையா யிருத்தலும், கஞ்சிதடவியபின் கடிதபடமாதலும், நீலமலினகாரத்தைப்பொருத்தியபின் லாஞ்சிதபடமாதலும், வர்ணபூரணமாகும்பொழுது ரஞ்சிதபடமமாதலும்போல பிரம்மம்மாயாகாரியாதீதமாயிருத்தலேசித்தாயும், மாயோபாதியோடுகூடியிருத்தலே அந்தரியாமியாயும், சமஷ்டிசூக்குமசரீர உபாதியைப்பொருந்தியிருததலேசூத்திராத்துமனுயும், ஸ்தூலசரீரசமஷ்டியுபாதியைப் பொருந்தியிருத்தலே விராட்புருஷனுயிருக்குகையும், ஆதல் ஆம். இந்த விராட்புருஷனையே ஈச்சுரனென்று ஏனைமதஸ்தர்சொல்லுகிறார்களென்று எண்ணுகிறேன். ஆனுல், சகத்கர்த்திருத்துவம் முதலியன உண்மையென்பது மற்றமதஸ்தர்களுடைய கொள்கை. மாயாகற்பிதமென்பது அத்துவைதிகளுடைய கொள்கை.

அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்த பிரம்மசைதன்னியத்தின் சாயைகளே ஜீவாத்துமாக்கள். அவைகளையே, அந்தக்கரணுவச்சின்ன சைதன்னியங்களென்பர். தேஜோவடிவான சூரியனுனவன் தடாகசலாதிகளிலே பிரதிபிம்பிப்பதுபோல தேஜோவடிவான பிரம்மசைதன்னியமானது, அவிச்சையின் பரிணுமங்களான அந்தக்கரணங்களில் பிரதிபலிப்பது. இதில் பிரம்மம், பிம்பம். அந்தக்கரணங்களுள் தோற்றும்வைகள், பிரதிபிம்பங்கள். அவைகளே ஜீவர்கள். சூரியனுகிய பிம்பத்துக்கும் நீரில்தோற்றும் பிரதி பிம்பங்களுக்கும் வேற்றுமை யில்லாததுபோல பிரம்மத்துக்கும் ஜீவர்களுக்கும் வேற்றுமையில்லை. பிரதி பிம்பங்களாகிய ஜீவர்களுக்குள்ளும்அந்தக்கரணரூபமான உபாதிபேதங்களேயன்றி அவைகள்தம்மில் தாமே யியற்கையாய் வெருனவையென்று சொல்லக்கூடாது. இந்தச் சிதாபாஸஜீவர்களே அனுதிகர்ம வாசனையினுல், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்னும்முத்துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். ஆத்தியான் மிகங்களாவன, தன்னைப்பற்றுவருவன ; அவை, சுரமுதலியன. ஆதிபௌதிங்களாவன, பிறவுயிறைப்பற்றிவருவன ; அவை, சர்ப்பாதிகளாம். ஆதிதைவிகங்களாவன, தைவத்தைப்பற்றிவருவன ; அவை, இடிமுதலியவை.

இந்தச்சிவர்களுக்கு நனவு, கனவு, சுழுத்தி, எனமூன்று அவஸ்தைகளுள்ளன. நனவு என்பது பொறிகள்விஷயங்களை நுகரும்தசை. கனவு என்பது, பொறிகளுடைய வுதவியில்லாமல் மனமேவிஷயங்களை நுகர்ந்து கொண்டிருக்கிற தசை. இந்தகனவிற்காணும் பொருள்களெல்லாம் பிராதிபாஸிகங்களேயன்றி உண்மையானவையல்ல. பிராதிபாஸிகமென்பது ஒரு குற்றத்தின் சேர்க்கையால் ஒருபொருள் மற்றொருபொருளாகத்தோற்றுதல். கனவிற்ரேற்றும் பொருள்களுக்குக்காரணமாகிய குற்றமாவது நித்திரை. கண்ணிற்குக் காசமுதலியநோய் களுண்டாயிருந்தால் அப்போது முத்துச்சிப்பியைக்கண்டு வெள்ளியெனமருள்கிறோம். இப்பியையறியாமையாகியஅவிச்சைகாரணமாகஇப்பியினிடத்தில் பொயத்தோற்றமாகியவெள்ளியுண்டாய் இப்பியென்னும்ஞானத்தினுல் அந்தப்பொய்த்தோற்றமாகிய வெள்ளிநீங்கிப்போகிறது. இதைபிராதிபாஸிகசத் என்றுசொல்லுகிறது. பாரமார்த்திகசத்தை, வியவஹாரிகசத்தை, பிராதிபாஸி கசத்தை, யென்று மூவ்விதசததைகள் சொல்லப்பட்டன. அவற்றுள் பாரமார்திகசத்தைபிரம்மத்தினிடத்திருப்பது. வியவஹாரிகசத்தை கடபடாதிகளுள் இருக்கின்றது. பிராதிபாஸிகசத்தை, சுக்திரூப்பியாதிகளில் இருக்கின்றது.

சுழுத்தி ஐம்பொறிகளும் அந்தக்கரணங்களும தொழிலற்றிருக் குங்காலம். இதையே நித்தியப்ரளயமென்பர். இனி விருத்தியவச்சின்ன சைதன்னியமாவது அந்தக்கர

ணபரிணும ரூபமான, விருத்திகளில், பிரதிபலிக்கிற சைதன்னியம். இதையே ஞானமென்பர். இது காட்சியறிவு முதலியபேதங்களால், பலவிதமாயிருக்கிறது.

விஷயாவச்சின்ன சைதன்னியம், கடபடாதிகள்.

இதில் மாயாவச்சின்ன சைதன்னியமாகிய ஈச்சுரன் முதலில் சிருஷ்டிக்கத்தக்க ஜீவகோடிகளுடைய மேன்மைகீழ்மைகளுக்கு ஏதுவாகிய கருமங்களை உதவியாகக்கொண்டு, அளவிறந்த வல்லமையையுடையதாகிய மாயையையும் வயப்படுத்திக்கொண்டு, நாமரூபாத்து மகமான, பிரபஞ்சத்தை உண்டுபண்ண நிச்சயித்து, முதலில், ஆகாசமுதலாகிய ஐம்பூதங்களென்னும் பஞ்சீகிருதங்களை யுண்டுபண்ணினார். அவற்றுள் ஆகாசத்திற்குக்குணம் ஓசை, வாயுவுக்கு ஓசையும் ஊறும் குணங்கள். தேஜஸ்ஸிற்கு, ஓசை, ஊறு, ஒளி, இவைகள் குணங்கள். ஜலத்துக்கு ஓசை முதலியவற்றோடு சுவையும், பிருதிவிக்குமுன் சொல்லப்பட்ட நான்குடன் நாற்றமும், குணங்களாகின்றன.

இந்த ஐம்பூதங்களும், முக்குணவடிவான அவிச்சையின் காரியங்களாதலால், இவைகளும் அம்முக்குணவடிவாகவே யிருப்பன. சத்துவகுணத்தோடுகூடியஇந்தப்பூதங்களால் மெய், வாய், கண், மூக்கு, செவி, இவைகளாகிய ஞானேந்திரியங்களும்; மனம், புத்தி, அகங்காரம், சித்தம், இவைகளாகிய அந்தக் கரணபரிணுமங்களும் உண்டாகின்றன.

இராசோகுணத்தோடுசேர்ந்த இந்த ஐம்பூதங்களினுலே, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம், என்னும் கன்மேந்திரியங்களுண்டாகின்றன. இரசோகுணததோடுசேர்ந்த இந்தப்பூதங்களினுலே, பிராணம், அபானம், வியானம், உதானம், சமானம், என்னும்ஐந்து பிராணன்கள் உண்டாகின்றன.

இந்தப் பஞ்சபூதங்களினுலும் ஞானேந்திரிய கன்மேன்திரியங்களினுலும் ஐந்து பிராணன்களினுலும் மனம், புத்தி, இவைகளாலும் சூக்குமசரீரம் உண்டாகின்றது. இதை லிங்கசரீரமென்பர். இந்தவுடல் வேறுலோகங்களுக்குப் போக வுதவியாயிருப்பது. ஆத்துமா முத்தியடைகிறவரையில் அவனுக்கு உறையுளாயிருக்கும்.

పంచప్రాణమనోబుద్ధిదశేంద్రియసమన్వితం;
అపంచీకృతభూతోత్థం సూక్ష్మాంగం భోగసాధనం;
బుద్ధికర్మేంద్రియప్రాణపంచకైర్మనసాధియా;
శరీరం సప్తదశభిస్సూక్ష్మం తల్లింగముచ్యతే;

தமோகுணத்தோடு சேர்ந்த பஞ்சீகிருதமல்லாத பூதங்களால் பஞ்சீகிருதங்களான பூதங்களுண்டாகின்றன. பஞ்சீகரணமென்பது ஆகாசமுதலிய ஐம்பூதங்களையும் முதலில் இரண்டாகப்பிரித்து, அதில் ஒவ்வொரு பங்கை நந்நான்காய்ப்பிரித்து, அந்நான்கில் ஒவ்வொருகூறை, முன்பிரியாமல் வைத்திருக்கிற வொவ்வொருபாதியோடுசேர்த்துக்கூட்டப், பஞ்சீகிருதபூதங்கள் ஏற்பட்டன. அவற்றுள், ஆகாசமாகிய பாதியை மற்றபூதங்களின் ஒவ்வொரு அஷ்டமாமிசத்தோடுசேர்க்க, பஞ்சீகிருதஆகாசம்உண்டாகிறது. இப்படி வாயுமுதலியவற்றையும் ஊஹித்துக்கொள்ள வேண்டியது.

இந்தப் பஞ்சீகிருத பூதங்களினுலேயே, அண்டங்களும், அவற்றிற்கு உட்பட்டபதினுன்குலோகங்களும் ஜராயுஜமுதலிய பிராணிகளும் உண்டாகின்றன. ஜராயுஜமென்பன மனிதர் முதலான ஜந்துக்கள். ஜராயுவென்பது கர்ப்பப்பை. அதிற்பிறந்தன ஜராயுஜங்கள். பறவை, பாம்பு முதலியன அண்டஜங்கள். அண்டமென்பது முட்டை. மூகட்டுப்பூச்சி முதலியன வேர்வையிலுண்டாவன. இவற்றை சுவேதஜமென்றுசொல்லுகிறது. சுவேதமென்பது வேர்வை. விருட்சமுதலியன உத்பிஜ்ஜங்களென்று சொல்லப்படுவன. உத்பிஜ்ஜங்கள் பிளந்துகொண்டு வருவன. பூமியைப் பிளந்துகொண்டுவருதலினுல் அவைகளுக்கு உத்பிஜ்ஜங்களென்றுபெயர்வந்தது.

இந்தப் பிரபஞ்சத்திற்கு மூலப்பிரகிருதி, பரிணுமியு பாதானம், குடத்திற்கு மண்ணைப்போல; பிரம்மம் விவர்த்தோபதானம். சுக்தியைவெள்ளியென்று மயங்குவதற்குச் சுக்தியைப்போல, பிரபஞ்சமென்று மயங்குதற்கு பிரம்மம் அதிஷ்டானமாயிருக்கிறது. அதிஷ்டானமென்பது ஆதாரம்; பரமார்த்தமான பிரம்மத்தினிடத்தில் பிரபஞ்சத்திற்கு, அத்தியாசம் உண்டாகின்றது. அத்தியாசமென்பது மயக்கம்.

சென்னபட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணிமுதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.